www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்






கருணாநிதி - அன்புமணி - புத்ததேவ்

## கோக்-பெப்சியின் புதிய அடியாட்கள்

படிப்பகம்

www.padippakam.com

# “நாட்டைக் காக்க கோக்கை விரட்டு!”

## – நாடெங்கும் பரவும் கோக் எதிர்ப்புப் போராட்டங்கள்

டெல்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் என்ற தன்னார்வ நிறுவனம், அமெரிக்க கோக்-பெப்சி முதலான குளிர்பானங்களில் அளவுக்கதிகமாக நஞ்சு கலந்துள்ளதை ஆதாரங்களோடு மீண்டும் நிரூபித்துள்ளதையடுத்து, நாடெங்கும் கோக்-பெப்சி எதிர்ப்புணர்வும் போராட்டங்களும் பெருகத் தொடங்கியுள்ளன. கேரள மாநில அரசு கோக் உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடை விதித்துள்ளது. குஜராத், கர்நாடக அரசுகள் தடை விதிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

தமிழகத்தில் கடந்த ஆண்டில் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், தாமிரவருணியை உறிஞ்சவரும் அமெரிக்க கோக்கை எதிர்த்து மிக விரிவாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டதோடு, கடந்த ஆண்டு செப்.12-ஆம் நாளன்று நெல்லையில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தையும், கோக் ஆலை அமைந்துள்ள நெல்லை - கங்கை கொண்டானில் மறியல் போராட்டத்தையும் நடத்தின. புரட்சிகர அமைப்புகள் மூட்டிய இப் போராட்ட நெருப்பானது, இன்று தமிழகமெங்கும் பெருந்தீயாகப் பற்றிப் பரவத் தொடங்கியுள்ளது. புரட்சிகர அமைப்புகள் மட்டுமின்றி பல்வேறு அமைப்புகளும், வணிகர் சங்கங்களும் பள்ளிக் குழந்தைகளும் அமெரிக்க உயிர்க்கொல்லி கோக்-பெப்சியை உடனே தடை செய்யக் கோரி தன்னெழுச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

கோக்கும் பெப்சியும் வெறும் நச்சுப் பானங்களல்ல; அவை, அமெரிக்க மூத்திரம்; அமெரிக்க மேலாதிக்கத்தின் சின்னம்; ஏகாதிபத்தியக் கொள்ளையின் அடையாளம். கோக் எதிர்ப்புப் போராட்டம் என்பது மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தின் அங்கம் என்பதை விளக்கி மக்களிடம் பிரச்சாரம் செய்து வரும் புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கோக் எதிர்ப்புப் போராட்டத்தை வீச்சாக நடத்தி வருகின்றன.

• தஞ்சையில், 8.8.06 அன்று மாலை கீழவாசல் காமராசர் சிலை அருகே ம.க.இ.க., பு.மா.இ.மு அமைப்புகள் இணைந்து கோக் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கோக் பாட்டில்களைத் தெருவில் போட்டு உடைக்கும் போராட்டத்தையும் நடத்தின. அமெரிக்க மூத்திரமாகிய கோக்-பெப்சியைத் தடை செய்து, அதன் சொத்துக்களை நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்ய வேண்டும்; இளநீர், மோர் போன்ற குளிர்பானங்களைப் பருகி, இளைஞர்கள் நாட்டுப்பற்றைச் சுவைக்க முன்வர வேண்டும் என்பதை விளக்கி எழுச்சியுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டமும் கோக் பாட்டில்களை உடைக்கும் போராட்டமும் இளைஞர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

• ஒசூரில் 9.8.06 அன்று காலை முதல் மாலை வரை பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து ''கோக்-பெப்சி உள்ளிட்ட 16 வகையான பன்னாட்டு நச்சுக் குளிர்பானங்களைத் தடைசெய்! அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்!'' என்ற முழக்கத்துடன் தெருமுனைக் கூட்டங்களையும் விளக்கக் காட்சிகளையும் மக்கள் மத்தியில் நடத்தின. அரசுப் பள்ளிகள், நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், கடைவீதிகள் - எனப் பல்வேறு இடங்களில் நடந்த இத் தெருமுனைக் கூட்டங்களை உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் வரவேற்று ஆதரவளித்தனர். பள்ளி மாணவர்கள் கோக் எதிர்ப்புப் பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு, ''அமெரிக்க மூத்திரத்தை நாங்கள் குடிக்க மாட்டோம்!'' என்று கோக்-பெப்சியைக் கீழே கொட்டித் தங்களது எதிர்ப்பைக் காட்டினர். இதைக் கண்டு உணர்வும் உற்சாகமும் அடைந்த தாய்மார்கள், ''எங்கள் குழந்தைகளை உங்களுடன் சேர்ந்து பிரச்சாரம் செய்ய அனுப்புகிறோம்; அடுத்ததாக இதுபோல கோக் எதிர்ப்புப் பிரச்சாரம் நடக்கும்போது எங்களுக்குத் தெரிவியுங்கள்'' என்று அக்கறையோடு தமது முகவரிகளைக் கொடுத்தனர்.

• நெய்வேலியில் 17.8.06 அன்று மந்தாரக்குப்பம் பேருந்துநிலையம் அருகே பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகள் இணைந்து ''உயிரைக் குடிக்கும் கொலைகார கோக்-பெப்சியைத் தடை செய்!'' என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. எந்தத் தொழிற்சங்கமும் கோக்-பெப்சிக்கு எதிராகப் போராட முன்வராத நிலையில் பு.ஜ.தொ.மு. நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களின் பேராதரவைப் பெற்றது.

• ''தாமிரவருணி எங்கள் ஆறு! அமெரிக்க 'கோக்'கே வெளியேறு! தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!'' என்ற முழக்கத்தின் கீழ் நெல்லையில் புரட்சிகர அமைப்புகள் கடந்த

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

அமெரிக்க ஆக்கிரமிப்பின் சின்னமான கோக்கை நாட்டைவிட்டு வெளியேற்றக் கோரி, நெல்லையில் நடந்த ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 21

**இதழ் 11**

செப். 2006

**உள்நாடு**
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

**வெளிநாடுகள்**
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10



**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## ஈழப் போர்: நீடிக்கும் இழுபறி!

**த**மிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை சிங்கள இனவெறி பாசிச அரசுக்கும் இடையிலான போர் நிறுத்தம் - புரிந்துணர்வு ஒப்பந்தம் நான்காண்டுகளுக்குப் பிறகு எவ்வித சடங்கும் முன்னறிவிப்பும் இல்லாமல் முடிவுக்கு வந்துவிட்டது. எந்தத் தரப்பும் கிரமமாகப் பிரகடனம் செய்யாத உக்கிரமான போர் ஈழத்தில் நான்காவது முறையாக மூண்டிருக்கிறது. சிங்கள இராணுவம் போர்க்களத்தில் படுதோல்வியையும், இழப்பையும் சந்திப்பதும், ஆத்திரத்தில் பதிலடியாக ஈழத் தமிழ் மக்களை மிருகத்தனமாகக் கொன்று குவிப்பதும், சொந்த மண்ணையும் வீடு வாசலையும் உற்றார் உறவினர்களையும் இழந்து இலட்சக்கணக்கில் அகதிகளாக அலைவதும், அகதி முகாம்களில் வதைபடுவதும் தஞ்சம் புகுந்த இடங்களையும் சிங்கள விமானப் படை குண்டுவீசி அழிப்பதும் மீண்டும் நிகழ்ந்திருக்கிறது.

போர் நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏகாதிபத்தியங்களால் மேலிருந்து திணிக்கப்பட்டவைதாம் என்றபோதும் தொடர்ந்து சுமார் 20 ஆண்டு போர்களால் ஏற்பட்ட துயரத்தை தணித்துக் கொள்ள ஈழத் தமிழர்களும், அரசியல் - பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித் தவித்த சிங்கள மக்களும் அதை வரவேற்றனர். ஆனால், அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கே முன்னின்று கொண்டு வந்த போர் நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கு நாடுகளுக்கு இலங்கையின் இறையாண்மையை அடகு வைப்பதாகவும், சிங்கள நலன்களை புலிகளிடம் இழப்பதாகவும் உள்ளதென்று சந்திரிகா - ராஜபக்சே தலைமையில் அணிதிரண்ட ஜே.வி.பி. மற்றும் உறுமய ஆகிய சிங்கள இனவெறி கட்சிகள் எதிர்த்தன. ரணிலும் தனது குறுகிய அரசியல் ஆதாயத்தை முன்னிறுத்தி அமைதி முயற்சிகளைக் கிடப்பில் போட்டு புலிகளின் எதிர்ப்பைப் பெற்றார். இதனால் புலிகள் மேற்கொண்ட "தேர்தல் புறக்கணிப்பு" என்ற அரசியல் முடிவைப் பயன்படுத்திக் கொண்டு ராஜபக்சே தலைமையிலான அப்பட்டமான சிங்கள பாசிச கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஈழப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை மட்டுமே எப்போதும் நம்பியிருக்கும் சிங்கள இனவெறி பாசிஸ்டுகள், விடுதலைப் புலிகள் இயக்கத்தை தளபதி கருணா வைத்துப் பிளவுபடுத்தி, ஒரு கைக்கூலிப் படையை ஏற்படுத்தி நிழல் சண்டையை, இரகசியப் படுகொலைகளைத் தொடங்கி நடத்தியது. ஈழத்தின் மறுநிர்மாண மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், சுனாமி நிவாரணத்துக்காகவும் அமைக்கப்படும் கூட்டு அமைப்புகளில் புலிகள் இடம் பெறுவதை ஜே.வி.பி., உறுமய முதலிய சிங்கள இனவெறி அமைப்புகள் கடுமையாக எதிர்த்தன. புலிகளும் தமது இராணுவ வலிமையைக் காட்டி சிங்கள அரசை நிர்பந்திக்கவும் துரோகிகளைப் பலிவாங்கவும் பல தற்கொலைப் படைத் தாக்குதல்கள், இரகசிய அழித்தொழிப்புகளை நடத்தினர்.

இத்தகைய தாக்குதல்களின் வரிசையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் லட்சுமன் கதிர்காமர் கொலை, இலங்கை இராணுவத் தளபதி மீதான தற்கொலைப் படைத் தாக்குதல் - துணைத்தளபதி உட்பட இராணுவத்தினர் பலர் கொன்றொழிக்கப்பட்டனர். அந்நிய நாட்டு அமைதிக் கண்காணிப்புக் குழுவினர் உட்பட இலங்கை இராணுவத்தினர் படைமுகாமுக்குத் திரும்பிய கப்பல் மீதான புலிகளின் கடற்படைத் தாக்குதல் முயற்சி ஆகிய நிகழ்ச்சிகளைக் காட்டி புலிகளுக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் சிங்கள இனவெறி அரசு வெற்றி பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம் (26 நாடுகளின் கூட்டமைப்பு) புலிகளைப் பயங்கரவாத அமைப்பென்று பிரகடனப்படுத்தி, தனிமைப்படுத்துவதிலும் வெற்றி பெற்றது. இந்தச் சாதகமான நிலைமையைப் பயன்படுத்தி இனவெறிப் போர் தொடுத்து ஈழப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு கண்டுவிட முடிவு செய்தது, சிங்கள இனவெறி அரசு. ஆனால், அதன் இராணுவ வெறிச் செயல்கள் தற்போது சிங்கள இனவெறி அரசை அதன் பாரம்பரிய ஆதரவு மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் கூட கண்டிக்கும் அளவுக்குப் போய்விட்டது.

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் ஓடும் மாவிலாறு அணையின் மூலம் முத்தூர், செருவிலா, இச்சாலம்பட்டு ஆகிய ஊர்களில் உள்ள எல்லாச் சமூகத்தையும் சேர்ந்த 15,000 ஏழை-எளிய குடும்பங்கள் விவசாயம் செய்து வந்தன. அந்தப் பகுதியை முற்றுகையிட்டுக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள், நீர்நிலையைப் பணயம் வைத்துப் போர் புரிவதாகக் குற்றஞ்சாட்டி, விமானத் தாக்குதலில் ஈடுபட்டது, இலங்கை அரசு. புலிகளுக்கும் இலங்கை அமைதி கண்காணிப்புக் குழுவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது; அணையின் கதவுகளைத் திறக்க புலிகளின் பகுதித் தளபதி

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கருணாநிதி - அன்புமணி - புத்ததேவ்

# 'கோக்'கின் புதிய அடியாட்கள்

"எங்கள் குளிர்பானம்தான் நாட்டிலேயே மிகவும் பாதுகாப்பனது" என்று தன்னிலை விளக்கமளிக்கும் விளம்பரங்களைப் பக்கம் பக்கமாக முன்னணி செய்தி ஏடுகளில் வெளியிடுகின்றன கோக்-பெப்சி குளிர்பானக் கம்பெனிகள். ஒவ்வொரு நாளும் விளம்பரத்துக்காக' மட்டும் பல கோடி ரூபாய் செலவு செய்து சந்தை ஆதிக்கத்தைப் பிடித்து வைத்திருக்கும் அக்கம்பெனிகள், அது மணல்கோட்டையைப் போல சரிந்து விழுவதைத் தடுக்க இப்படி விளம்பரம் செய்கின்றன.

கோக்-பெப்சி கம்பெனிகளின் சார்பாக, அவற்றின் வியாபார வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல(!) மந்திரி அன்புமணி இராமதாசு களத்தில் குதித்திருக்கிறார். கோக்-பெப்சி குளிர்பானங்களில், சராசரி 30 மடங்கு பூச்சிக் கொல்லி நச்சுப் பொருட்கள் இருப்பதாக தில்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் மூன்றாண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக இப்போது அறிவித்தது. ஐரோப்பிய ஒன்றியத் தரத்தை விட 24 மடங்கு அதிகமாக நச்சுக் கலந்திருப்பதாகவும் கூறுகிறது.

நாடு முழுவதும் கோக்-பெப்சி 16 பெயர்களில் விற்பனை செய்யும் குளிர்பானங்களில் 57 மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்ததில், மனிதர்களின் ஈரல், சிறுநீரகம், நோய் எதிர்ப்பு உறுப்புகளைப் பதிக்கும் லிண்டேன் முதலிய பூச்சிக்கொல்லி நச்சுக்கள் எல்லா மாதிரிகளிலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் கிடைக்கும் தண்ணீரில்தான் நச்சு இருக்கிறது என்று கோக்- பெப்சி நிறுவனங்கள் புளுகுவதையும் அந்த நிறுவனம் அம்பலப்படுத்தியிருக்கிறது.

கோக்-பெப்சி குளிர்பானங்களில் 90 சதவீதம் தண்ணீரும், 8 சதவீதம் சர்க்கரையும், 2 சதவீதம் அக்கம்பெனிகளின் ருசியூட்டும் வேதிப் பொருட்களும்தாம் உள்ளன. கோக், பெப்சி விற்பனை செய்யும் குடிதண்ணீர்களில் நச்சுப் பொருட்கள் இல்லை; சர்க்கரையிலும் நச்சுப் பொருட்கள் இல்லை; கோக்-பெப்சி நிறுவனங்கள் விற்கும் குடிதண்ணீரில் மட்டும் நச்சுப் பொருட்களை சுத்தமாக்கிவிட முடியும் போது குளிர்பானங்களில் மட்டும் ஏன் நச்சுப் பொருட்கள் இருக்கின்றன? அக்கம்பெனிகளின் வேதிப் பொருட்களில் தான் நச்சுப் பொருட்கள் கலக்கப்படுகின்றன என்பது தெளிவாகிவிட்டது. அதனால்தான் இந்தக் கம்பெனிகள் தமது குளிர்பானங்களில் என்னென்ன வேதிப் பொருட்களை எந்த அளவு கலக்கின்றன என்பதனை வியாபார இரகசியம் என்ற பெயரில் 120 ஆண்டுகளாக மறைத்து வருகின்றன.

மற்ற எல்லா உணவுப் பொருட்கள், மருந்துகளில் உள்ள உள்ளடக்க விவரங்களை "பாக்கட்டுகள்", புட்டிகள், டப்பாக்களின் மீது அச்சிட வேண்டும்; அதை அறிந்து கொள்வது நுகர்வோரின் உரிமை என்றிருக்கிறபோது, கோக்- பெப்சி கம்பெனிகள் மட்டும் அந்த உரிமையைப் பிடிவாதமாக மறுக்கின்றன. 2006, ஆக. 4-ஆம் தேதி உச்சநீதி மன்றம் கோக், பெப்சி கம்பெனிகளுக்கு ஒரு உத்தரவு போட்டது. அதாவது, அவை தமது குளிர்பானங்களில் கலக்கும் வேதிப் பொருட்களைப் பற்றிய விவரத்தைப் பகிரங்கப் படுத்த வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு.

1954-ஆம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டப்படி, உணவுப் பொருட்களில் காணப்படும் பூச்சிக் கொல்லி நச்சுப் பொருட்களின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கிறது. 2003-இல் கோக்-பெப்சி கம்பெனி குளிர்பானங்களில் அந்த வரையறுக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக நச்சுக் கலந்திருப்பதாக அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் அறிவித்த பிறகு, நாடு முழுவதும் அக்கம்பெனிகளுக்கு எதிர்ப்புக் கிளம்பிய போது, விற்கப்படும் குடிதண்ணீரில் பூச்சிக் கொல்லி நச்சின் அளவை வரையறுத்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு, குளிர்பானங்களில் அதன் அளவை வேண்டுமென்றே வரையறுக்காமல் விட்டு விட்டது.

அதற்குப் பதிலாக, வேண்டுமென்றே, துரோகத்தனமாக ஒரு வேலையை பா.ஜ.க. அரசு செய்தது. குளிர்பானத் தயாரிப்புக்குப் பயன்படும் தண்ணீரில் பூச்சிக் கொல்லி நச்சின் அளவை வரையறுத்துவிட்டு, தயாரித்து முடித்து விற்பனைக்கு வரும் குளிர்பானத்தில் எந்த அளவு மட்டும் இருக்க வேண்டும் என்று வரையறுக்காமல் விட்டது. கம்பெனிகள் குளிர்பானம் தயாரிக்கப் பயன்படுத்தும் தண்ணீரில் உள்ள நச்சுப் பொருட்களின் அளவை எப்படிக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் முடியும்? இப்படி ஒரு பெரிய ஓட்டையைக் கொண்ட அரசு ஆணையின்படி, உச்சநீதி மன்றத்தின் ஆணையை அமலாக்க முடியாமல் போனது.

இதனால், இந்தியத் தரக் கட்டுப்பாட்டுக் கழகம், பல அறிவியலாளர்கள், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம், கோலா கம்பெனிகளின் பிரதிநிதிகள் ஆய்வு செய்து, விற்கப்படும் குளிர்பானங்களில் அனுமதிக்கக் கூடிய நச்சுப் பொருளின் அளவை வரையறுத்தனர்.

தஞ்சையில் ம.க.இ.க. - பு.மா.இ.மு. இணைந்து நடத்திய கோக் உடைப்புப் போராட்டம்.



www.padippakam.com

அந்த வரையறையை அவர்கள் வெளியிடுவதற்கு ஒரு நாள் முன்னதாக மக்கள் துரோகி அன்புமணி இராமதாசு பொறுப்பில் உள்ள சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகச் செயலாளர் தனது முடிவை வெளியிடாது தள்ளி வைக்கும்படி இந்தியத் தரக் கட்டுப்பாட்டுக் கழகத்துக்கு கடிதம் எழுதினார். குளிர்பானங்களில் அனுமதிக்கப்படக்கூடிய நச்சுப் பொருட்களின் அளவை வரையறுத்து அறிவிக்கை வெளியிடவில்லை என்கிற இந்த ஒரு காரணத்தை வைத்தே கோக்-பெப்சி கம்பெனிகள் தனது கொலைகார குளிர்பான விற்பனையைத் தடையின்றி நடத்தி வருகின்றன.



ஓசூரில் பு.ஜ.தொ.மு. நடத்திய கோக் எதிர்ப்புப் போராட்டத்தில், அந்த அமெரிக்க மூத்திரத்தைத் தரையில் கொட்டும் பள்ளிச் சிறுவர்கள்.

இந்த உண்மைகளைத் தனது இணையத்தளம் மூலம் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் பகிரங்கப்படுத்திய பிறகு, நாடு முழுவதும் ஆத்திரம் பொங்கியது. 2003 ஆண்டே மக்களிடையே எழுந்த கோக்-பெப்சி எதிர்ப்பை சமாளித்து, நாடாளுமன்றக் கமிட்டி அமைத்து, பூசி மெழுகி துரோகம் செய்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல், தாம் ஆட்சி நடத்தும் குஜராத், ம.பி., இராஜஸ்தான், சட்டிஸ்கரில் தேசபக்தி நாடகமாடி அந்தக் குளிர்பானங்களைக் கல்வி நிறுவனங்களிலும், அரசு அலுவலகங்களிலும் விற்பதற்குத் தடை விதித்தன. தான் மட்டும் பின்தங்கி அம்பலப்பட்டு விடக்கூடாது என்று காங்கிரசும் பஞ்சாப், ஆந்திரப்பிரதேசத்தில் இதேபோல தடை விதித்தன. போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளா முழுவதும் கோக்-பெப்சிக்கு உற்பத்தி, விற்பனை இரண்டுக்கும் தடை விதிக்கப்பட்டது. வேறு எந்த மாநிலத்தையும் விட போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளாவில் மட்டும் இவ்வளவு கடுமையான - உறுதியான நடவடிக்கை எடுக்கக் காரணம் ஒன்று உள்ளது. கோக் ஆலையை கேரளா - பிளாச்சிமடாவில் நிறுவ உரிமம் வழங்கி, அதன் மூலம் அங்கு நிலத்தடி நீரை நஞ்சாக்கி, அதற்கு எதிராக, மக்கள் இயக்கங்கள் நடந்து போலி கம்யூனிஸ்டுகள் பெருமளவு அம்பலப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

போலி கம்யூனிஸ்டுகள் தாங்கள் ஆளும் கேரளாவில், கோக்-பெப்சிக்கு எதிராக நாட்டிலேயே ''அதிதீவிர'' நடவடிக்கை எடுத்தபோதும், துரோகக் கம்யூனிஸ்டுகளின் தளபதியும் மே.வங்க முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா அது பற்றித் தனக்குத் தெரியாது; மத்திய அரசுக்குத் தான் இதற்கு அதிகாரம் உள்ளது; விவரம் அறிந்தபின் கருத்துச் சொல்கிறேன் என்று துணிந்து புளுகித் தள்ளியிருக்கிறார். இத்தனைக்கும் கொல்கத்தாவில் விற்கப்படும் கோக்-பெப்சியில்தான் நாட்டிலேயே மிக அதிகமாக - அதாவது 140 மடங்கு நச்சுப் பொருள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புத்ததேவையும் முந்திக் கொண்டு கோக்-பெப்சிக்கு வக்காலத்து வாங்குகிறார் இப்போதைய போலி முற்போக்கு - போலி கம்யூனிஸ்டு அணியின் தளபதி கருணாநிதி. மத்திய அரசு தடை விதித்தால் தடைவிதிக்கத் தடையேதுமில்லை; புதுச்சேரியில் தடைவிதிக்காது, பயனேதும் இல்லை என்கிறார். அண்டை மாநிலங்களில் கள்ளும் சாராயமும் ஆறாக ஓடியபோது இங்கு மட்டும் மதுவிலக்கு இருந்தது எப்படி என்ற கேள்வி அந்தப் ''பகுத்தறிவாளருக்கு'' எழவில்லை. இப்படியே போனால், அமெரிக்காவில் கூட கோலா விற்கப்படுகின்றனவே என்றும் வாதம் புரிவார். ஆண்டுக்கு 600 கோடி ரூபாய் வானொளி விளம்பரத்துக்கு கோகோ கோலா வாரியிறைக்கிறது. அதில் பெருந்தொகை, நான்கு மாநிலங்களில் 10 அலைவரிசைகளை நடத்தும் கருணாநிதி குடும்பத்து சன் குழுமத்திற்குப் போகிறது. அதே அளவுக்கு இல்லாவிட்டாலும், ஒரேயொரு அலைவரிசை நடத்தினாலும், ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது தாமிரவருணியைத் தாரை வார்த்த ஜெயா - சசி கும்பல் கணிசமான அளவு கறந்துவிட்டிருக்கிறது.

கடைசியாக கோக், பெப்சிக்கு எதிரான மக்கள் ஆத்திரத்தை தணிப்பதற்கு துரோகி அன்புமணி இராமதாசே நேரடியாக களத்தில் குதித்தார். அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் ஆய்வுகள் போதிய விவரங்களை, ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை; அவற்றை ஏற்கமுடியாது என்று கோலா கம்பெனிகளின் ஏஜெண்டாக மாறி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை எல்லா வகையிலும் காப்பி அடிக்கும் சமூகநீதி நடிகர் ராமதாசின் குலக்கொழுந்து அன்புமணி இராமதாசு, அவர்கள் எல்லோரையும் எடுத்து விழுங்கிவிடும் அளவுக்கு பன்னாட்டுத் தொழில்கழகங்களின் எடுபிடியாகவே செயல்படுகிறார். சினிமாவில் புகைபிடிப்பதைத் தடை செய்வதன் மூலம் மாபெரும் சுற்றுச்சூழல் போராளியாகவும், ஊரெங்கும் மரங்கள் நடும் மக்கள் தொண்டனாகவும் வேடங்கட்டி ஆடிய இந்த மத்திய சுகாதார மற்றும் குடும்பநல (!) மந்திரி அன்புமணி, இருவன்னிய இளைஞர்கள் நடத்தி வந்த ''பசுமைத் தாயகம்'' என்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்தை அடாவடியாகவும் ஏமாற்றியும் கைப்பற்றிக் கொண்டு சுற்றுச்சூழல் காவலர் என்ற பெயரில் தொழிலதிபர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் அமைப்பாக மாற்றிக் கொண்டு, அதையே தனது அரசியல் நுழைவுக்குப் பயன்படுத்திக் கொண்டார். இப்போது, பன்னாட்டு நச்சு வியாபாரிகளான கோக், பெப்சி நிறுவனங்களின் கைக்கூலியாகவே செயல்படுகிறார்.

இந்த நாட்டிலுள்ள போலி முற்போக்குகளும், போலி கம்யூனிஸ்டுகளும்தாம் ஏகாதிபத்தியங்களுக்குத் தொண்டூழியஞ் செய்வதில் முன்னணிப் பாத்திரம் ஆற்றுகிறார்கள் என்ற உண்மையை கோக்-பெப்சியின் விவகாரம் வெட்டவெளிச்சமாக்கியிருக்கிறது. இந்த வகையில் பரம்பரை ஏகாதிபத்திய அரசியல் கைக்கூலிகளான காங்கிரசையும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வையும் இவர்கள் விஞ்சி விட்டார்கள். அதனால்தான் ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழில் வர்த்தக நிதி மூலதனங்களுக்கு நடைபாவாடை விரித்து வரவேற்பதில் குஜராத், மகாராட்டிரத்தை விஞ்சிவிட போலி கம்யூனிஸ்டுகளும் போலி முற்போக்குகளும் துடிக்கின்றனர்.

• குப்பன்


படிப்பகம்

www.padippakam.com

# குற்றக் கும்பல்களின் பிடியில் திணறும் இந்தியா

"**பொ**துவில் சொன்னால், குற்றவாளிகளில் பலர் சூழ்நிலைக்குப் பலியானவர்கள்தாம்" - இப்படிச் சொன்னவர் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா. சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டு விடுதலையான இரண்டு பெண்களுக்கான மறுவாழ்வு ஆணைகளை வழங்கிய அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

அவசரநிலை ஆட்சியில் பர்னாலா கைதாகி ஜலந்தர் சிறையில் அடைக்கப்பட்டபோது, உணவு பரிமாறிக் கொண்டிருந்த ஒரு சிறுவனைக் கண்டாராம். வெறும் 20 காசுக்கான தகராறில் வாய்ச்சண்டை முற்றியதால் இந்தச் சிறுவன் ஒருவனைக் கத்தியால் குத்திவிட, அவன் செத்துப் போனான். அதற்காகத் தண்டிக்கப்பட்ட இந்தச் சிறுவன் சிறையில் கிடந்தான். இவனை எடுத்துக்காட்டாகக் காட்டித்தான், பெரும்பாலான குற்றவாளிகள் சூழ்நிலைமைகளுக்குப் பலியானவர்கள்தாம் என்று பர்னாலா கூறியிருக்கிறார்.

பர்னாலா ஒரு பழுத்த அரசியல்வாதி. அதாவது "பழம் தின்று கொட்டை போட்டவர்" என்று சொல்வார்களே அந்த வகையைச் சேர்ந்தவர். அதனால்தான் உண்மைக்கு மாறாகப் பேசியிருக்கிறார். "பெரும்பாலான கிரிமினல் குற்றங்கள் வேண்டுமென்றே திட்டமிட்டே நிகழ்த்தப்படுகின்றன. அப்படிப்பட்ட குற்றவாளிகள் பெரும்பாலும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்கள்" என்று சொல்லி இருந்தால்தான் சரியாக இருக்கும்.

"சந்தர்ப்ப சூழ்நிலைகளால் குற்றங்கள் புரிபவர்கள்தான் பெரும்பாலும் வழக்குமன்றங்களில் நிறுத்தப்படுகிறார்கள்; இப்படிப்பட்டவர்கள்தான் பெரும்பாலும் தண்டிக்கப்படுகிறார்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு கிரிமினல் குற்றங்கள் புரிபவர்கள் வழக்குமன்றங்களுக்குப் பெரும்பாலும் கொண்டு வரப்படுவதில்லை. தவறிப்போய் கொண்டு வரப்படுபவர்களும் பெரும்பாலும் தண்டிக்கப்படுவதில்லை" என்று சொல்லியிருந்தால் இன்னும் சரியாக இருந்திருக்கும்.

"கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்டவர்கள் செய்யும் குற்றங்கள்தாம் மிகமிக அதிகமாக இருக்கின்றன. அவர்களும் அமைப்புரீதியில் ஒருங்கிணைந்த குற்றக் கும்பல்களாக உள்ளனர். சட்டத்துறையும், காவல்துறையும், நீதித்துறையும் அதற்குப் பாதுகாவலாக செயல்படுகின்றன" என்று சொல்லியிருந்தால் துல்லியமாக இருந்திருக்கும்.

இப்படிக் கருதுவதற்கு மிகச் சிறந்த சமீபத்திய எடுத்துக்காட்டுகள்:

1. தற்போது மையப் புலனாய்வுக் கழகத்தின் விசாரணையில் இருக்கும் போலி முதல் தகவல் அறிக்கை மற்றும் காப்பீட்டு நிறுவனத்தில் நடந்த மோசடிகள் குறித்த வழக்கு.

2. சபரிமலை தலைமைத் தந்திரி கண்டரரு மோகனருவைக் கடத்தி விபச்சாரியுடன் நிர்வாணப் புகைப்படம் பிடித்து, மிரட்டிப் பணம் பறிக்க முயன்றதாகக் கூறிப் போடப்பட்டுள்ள சோபா ஜான் கும்பல் மீதான வழக்கு.

3. 3000 கோடி ரூபாய் அளவுக்கு போலி முத்திரைத்தாள் அச்சடித்து நாடு முழுவதும் விற்றதற்காகப் போடப்பட்டுள்ள தெல்கி கும்பல் மீதான வழக்கு.

இம்மூன்று வழக்குகளிலும், தலா நூற்றுக்கணக்கானவர்கள் நன்கு திட்டமிட்டு, பல ஆண்டுகளாக கிரிமினல் குற்றங்கள் புரிந்துள்ளனர். அரசியல்வாதிகள், உயர் அரசுப் பதவிகளில் இருப்பவர்கள், போலீசார்கள் ஆகியோர் கிரிமினல் குற்றக் கும்பல்களோடு சேர்ந்து குற்றங்கள் புரிந்துள்ளனர். ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் பிடித்துத் தண்டிப்பதற்குப் பதில் கண்துடைப்பு வேலையாக ஒரு சிலர் மீது மட்டும் வழக்குகள் தொடுத்துவிட்டு, பல முக்கியப் புள்ளிகள் தப்பித்துப் போக நீதித்துறையே உடந்தையாக செயல்பட்டு வருகிறது.

### போலி முதல் தகவல் அறிக்கைகளும் காப்பீட்டு (இன்சூரன்சு) நிறுவனத்தில் நடந்த கொள்ளையும்

கடந்த சட்டமன்றத் தேர்தல்களுக்கு சில வாரங்களுக்கு முன்பு, அன்றைய ஆட்சியை அம்பலப்படுத்தும் முகமாக சில செய்திகளை கருணாநிதியின் குடும்பத் தொலைக்காட்சியும், ஏடுகளும் வெளியிட்டன. தமிழக போலீசு நிலையங்களில் போலி முதல் தகவல் அறிக்கைப் படிவங்கள் அச்சிட்டு மோசடிகள் நடப்பதாக வந்த செய்தி அவற்றில் ஒன்று. இந்தச் செய்தி வெளியான உடனேயே தமிழகப் போலீசு நிலையங்களில் எல்லாம் கட்டுக்கட்டாக முதல் தகவல் அறிக்கை (மு.த.அ.) படிவங்கள் கொளுத்தப்பட்டன. அந்தச் செய்தியும் புகைப்படங்களுடன் வெளிவந்தன. சேலத்தில் ஒரு அச்சக உரிமையாளர் கைது செய்யப்பட்டார். போலி மு.த.அ. படிவங்கள் அச்சிட்டதாக அவர் மீது வழக்கும் போடப்பட்டது.

இதையடுத்து, இந்தப் போலி மு.த.அ. படிவங்கள் பயன்படுத்தியதாக பல போலீசு நிலையங்களில் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக செய்தியும் வந்தது; ஆனால், ஒரு போலீசுக்காரன் கூட கைது செய்யப்படவுமில்லை, வழக்கும் போடப்படவில்லை. பழைய ஆவணங்களை எரிப்பது வழக்கந்தான் என்றும், அரசு வழங்கும் மு.த.அ. படிவங்கள் போதியனவாக இல்லாததால் அந்தந்த போலீசு நிலையங்களிலேயே அச்சிட்டுக் கொள்ளும்படி மேலிடத்திலிருந்து வாய்வழி கட்டளை வந்ததாகவும் கிசுகிசு ஏடுகளில் செய்திகளைக் கசியவிட்டது, போலீசுத்துறை.

"நம்பகமான செய்திகளை மட்டுமே வெளியிடுவது" என்ற முடுதிரையின் பின்னே ஒளிந்து கொண்டிருக்கும் ஜெயலலிதா ஆதரவு பார்ப்பன ஏடுகளான தி இந்து, தினமணி, எக்ஸ்பிரஸ் போன்றவை மட்டுமல்ல; வதந்திகளையே எழுதிக் குவிக்கும் தினமலர்(ம்) கூட இந்த போலி மு.த.அ. விவகாரம் பற்றிய செய்திகளை இருட்டடிப்பு செய்தது. இறுதியில், ஒரு ஓய்வு பெற்ற போலீசுக்காரரே உயர்நீதி மன்றத்தில்

www.padippakam.com

வழக்குத் தொடுத்த பிறகு, ஓரிரு அங்குலச் செய்தியாக அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டன.

ஆட்சி மாறிய பிறகு, யுனைடெட் இந்தியா இன்சூரன்சு லிமிடெட் என்ற அரசுடைமையாக்கப்பட்ட காப்பீட்டுக் கழகம், இந்தப் போலி மு.த.அ.களைப் பயன்படுத்தி 1061 வழக்குகள் போட்டு 200 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி நடந்திருப்பதாக ஒரு வழக்குப் போட்டது. தமிழ்நாடு முழுவதும் பல போலீசு நிலையங்களின் போலீசுக்காரர்கள், அதிகாரிகள், அரசு மருத்துவமனை எலும்பு முறிவு மருத்துவர்கள், காப்பீட்டுக் கழக அதிகாரிகள், வழக்கறிஞர்கள் இந்த மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். சாதாரண விபத்துகளில்கூட வாகனங்களும் ஆட்களும் பாதிக்கப்பட்டதாகவும், இயற்கையாக இறந்தவர்கள் கூட விபத்தில் மரணமடைந்தவர்களாகக் காட்டியும் பொய்யான சான்றிதழ்கள், சாட்சியங்களைப் புனைந்து ஒவ்வொரு வழக்கிலும் இலட்சக்கணக்கில் அரசுடைமைக் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து கொள்ளையிட்டுள்ளனர்.

இந்த வழக்குகளில் மாநிலப் போலீசே குற்றமிழைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதால், சி.பி.ஐ. (மத்திய புலனாய்வு நிறுவனம்) விசாரணை கோரி, அவ்வாறே தீர்ப்பும் கூறப்பட்டது. சிவகாசி ஜெயலட்சுமி வழக்கில் நடந்ததைப் போல, சி.பி.ஐ. விசாரணை தொடங்கிய பிறகு, குற்றவாளிகளைத் தப்புவிக்கும் படலம் தொடங்கிவிட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்த வழக்குகளை விசாரிப்பதற்குத் தங்களிடம் போதிய அதிகாரிகள் - ஆட்பலம் கிடையாது என்று வழக்கு மன்றத்திடம் எடுத்தவுடன் கைவிரித்தது சி.பி.ஐ. வழக்குமன்றமும் அதை ஏற்றுக் கொண்டு எல்லா வழக்குகளையும் விசாரிக்கத் தேவையில்லை, முக்கியமான பதினோரு வழக்குகளை விசாரித்தால் போதும் என்று தாராள மனதுடன் ஆணை பிறப்பித்து விட்டது.

மீதி 1050 வழக்குகளின் கதி என்ன? ''நீதி தேவனுக்கே வெளிச்சம்!'' இதிலிருந்து தெரிவது என்ன? ஒன்றிண்டு குற்றங்கள் செய்தால்தான் தண்டிக்க முடியும். ஏராளமான அளவுக்கு குற்றங்கள் செய்தால் விசாரிக்கவும் முடியாது, தண்டிக்கவும் முடியாது. இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் மோசடிக்கு பலியான காப்பீட்டு நிறுவனம், நட்டஈடு கோறும் வழக்குகள் போலியானவை; அவற்றைத் தொடுத்தவர்கள் தாமாகவே விலகிக் கொண்டால் மேல் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று அறிவித்தது. வெளியே தெரிந்துள்ள வழக்குகளே ஆயிரத்தைத் தாண்டி உள்ளன. இன்னும் தெரியாத குற்றங்கள் எவ்வளவோ! வெளிச்சத்துக்கு வந்த வழக்குகளை விசாரிப்பது, தண்டிப்பது என்றாலே சில ஆயிரம் பேரையாவது சிறையிலடைக்க வேண்டும். ஒரு வகை வழக்குகளிலேயே இந்த நிலைமை என்றால், எல்லா வகை குற்றங்களையும், வழக்குகளையும் விசாரிப்பது, தண்டிப்பது என்றால் ஊருக்கு ஒரு பெரிய சிறைச்சாலை வேண்டும்; அதிலும் குற்றங்கள், இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் நடக்கும். இப்படியே போனால் குற்றங்களைத் தடுப்பதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் பொறுப்பேற்றுள்ளவர்களே குற்றவாளிகளாக இருப்பது தெரிந்து விடாதா? அதை விடச்சிறந்த, எளிய வழி - விசாரணையும் நடப்பதாகவும் தண்டனை வழங்கப்படுவதாகவும், நீதி நிலைநாட்டப்படுவதாகவும் ஒரு கண்துடைப்பு நாடகமாடுவது தானே! அதுதான் நடக்கிறது.

### சபரிமலை தந்திரிகளும் ஆளும் போலி கம்யூனிஸ்டுகளின் தந்திரங்களும்

சபரிமலை ஐயப்பன் கோவில் வசூலைப் பெருக்குவதற்கு கம்பி வழித்தடம் உட்பட பல புதிய திட்டங்களை வகுத்து அமலாக்குவதற்கு, அய்யப்பனின் ஒப்புதலைப் பெறுவதற்காக ''தெய்வவாக்கு'' பெறுவது என்று போலி கம்யூனிஸ்டுகளின் அரசும் திருவிதாங்கூர் தேவசம் வாரியமும் முடிவு செய்தன. ஜெயலலிதா-சசிகலா கும்பலின் அரசவை சோதிடர் உன்னிகிருஷ்ண பணிக்கர் கடந்த ஜூனில் தெய்வவாக்கு (தேவ பிரசன்னம் எனப்படும் சோதிடம்) பார்த்தார். அதில் (தனது சன்னிதானத்தில் இளம்பெண்கள் நுழைந்து விட்டதால்) அய்யப்பன் கோபத்தில் இருப்பதாகவும் அதற்குக் கோவில் தலைமைப் பூசாரிகள் பரிகார பூசைகள் நடத்த வேண்டும் என்றும், (தந்திரிகள்தாம் இதற்குக் காரணம் என்றும்) பணிக்கர் கூறினார். கன்னட நடிகை ஜெயமாலாவும் இந்தி நடிகை மயூரியும் தாம் அய்யப்பன் கருவறைக்குள் நுழைந்து வணங்கியிருப்பதாக ஒப்புதல் அளித்தனர்.



அரசியல்வாதிகள்-போலீசு அதிகாரிகளின் தொடர்பைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு, பல்வேறு சமூக விரோதக் குற்றங்களைச் செய்துள்ள மாஃபியா கும்பல் தலைவி சோபா ஜான்.

அய்யப்பன் கோவிலுக்குள் பெண்கள் நுழைந்ததால் அதன் புனிதம் கெட்டுத் தீட்டுப்பட்டு விட்டதாக பக்தர்கள் கொதித்துப் போவார்கள் என்று போலி கம்யூனிஸ்டு ஆட்சியாளர்களுக்கு அக்கறை பொத்துக் கொண்டு வந்துவிட்டது. போலீசை அனுப்பி புலனாய்வு செய்தது. விசாரணைக்கு நடிகை ஜெயமாலா மறுத்துவிடவே, பரிகார பூசை நடத்தி விவகாரத்தை அமுக்கிவிட எண்ணியது. அய்யப்பன் கோவில் தந்தரிகள்தாம் நடிகைகளை உள்ளே விட்டு முறைகேடுகள் செய்துவிட்டதாக ஒப்பு கொண்டதாகிவிடும் என்பதால், அவர்கள் பரிகார் பூசைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அய்யப்பன் கோவில் தலைமை தந்திரி, கண்டரரு மோகனரரு ஒரு புதிய ''பூத''த்தைக் கிளப்பி விட்டார். சொந்த வேலையாக எர்ணாகுளம் சென்ற தன்னை யாரோ சிலர் கடத்தி, ஒரு பெண்ணுடன் நிர்வாணப் புகைப்படமெடுத்து, ஒரு கோடி ரூபாய் கேட்டு மிரட்டுவதாகவும் தன்னிடமிருந்து நகைகளையும் ரொக்கப் பணத்தையும் பிடுங்கிக் கொண்டதாகவும் போலீசில் புகார் கூறினார். போலீசு விசாரணையில் வேறுபல உண்மைகள் வெளியே வந்தன.

எர்ணாகுளத்தில் உள்ள ஒரு விபச்சாரத் தரகுப் பெண் வீட்டுக்கு வழக்கம்போல விபச்சாரம் செய்யத் தந்திரி போனபோதுதான் அப்படி நடந்துள்ளது. சோபா ஜான் எனப்படும் அந்த பெண் விபச்சாரத் தொழில் செய்வதோடு, தனது வாடிக்கையாளர்களை ஆபாசப் படமெடுத்தும் ஆட்களைக் கடத்தி



போலி முதல் தகவல் அறிக்கை வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. நாமக்கல் போலீசு நிலையத்தில் விசாரணை நடத்தியபொழுது, அவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களைத் தேடும் போலீசார்.

மிரட்டிப் பணம் பறிப்பதும், கிரிமினல் குற்றக் கும்பல்களை வைத்து வீடு-வீட்டுமனைத் தொழில் புரிந்ததாகவும், இரண்டு காங்கிரசு அமைச்சர்கள், ஏழு சி.பி.எம்.-தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், போலீசு, ஐ.ஜி வரை பல அதிகாரிகள் உட்பட பல முக்கியப் புள்ளிகள் அந்தத் தரகு பெண்ணின் வாடிக்கையாளர்கள் என்பதும் வெளியே வரத் தொடங்கியது.

முதலில் அனாதரவான ஒரு விதவைப் பெண்ணுக்கு உதவப் போன போதுதான் கடத்தப்பட்டதாகவும், பின்னர் தனது வீட்டு வேலைக்கு ஆள் வைப்பதற்காக அந்தப் பெண்ணிடம் உதவி நாடப்போனபோது தான் கடத்தப்பட்டதாகவும் மாறிமாறி தந்திரி கண்டரரு மோகனரு உளறினார். ஆனால், கிரிமினல் குற்றக் கும்பல் தலைவி சோபா ஜான் விபச்சாரம் நடத்தி வந்த அடுக்குமாடி வீட்டிற்குத்தான் தந்திரி போயுள்ளார், சோபா மற்றும் தந்திரியுடன் வைத்து நிர்வாண புகைப்படமெடுக்கப்பட்ட பெண் சாந்தா ஆகியோர் ஏற்கெனவே விபச்சார வழக்கில் சிக்கியவர்கள், மேலும் பல விபச்சாரிகள், சினிமா நடிகைகளுடன் தந்திரி உறவு வைத்திருந்தார், தந்திரி மட்டுமல்ல, கேரளாவின் பல முக்கிய புள்ளிகள் சோபாவின் வாடிக்கையாளர்கள் என்ற உண்மை வெளியானது.

இதனால் பதறிப் போனது தந்திரியை விட கேரளாவை ஆளும் போலி கம்யூனிஸ்டுகளின் அரசுதான். சோபா கும்பலின் அரசியல் - அதிகார புள்ளிகளுடனான தொடர்புகள் மற்றும் தொழில் இரகசியங்களையெல்லாம் விசாரிக்க வேண்டாம்; அவற்றைக் கேட்டு உண்மையான விவரங்களை அறியும் வகையில் மிரட்டவோ, வதைக்கவோ கூடாது; அவர்களை மரியாதையுடன் நடத்தவேண்டும் என்று போலீசுக்கு வாய்வழி ஆணைகள் போட்டது, கேரள அரசு. சபரிமலை தந்திரி கண்டரரு மோகனரு தன்னைக் கடத்தி, பணம் - நகை பறித்ததாகக் கொடுத்த புகாரை மட்டும் விசாரிப்பதோடு நின்று கொள்ளவேண்டும் என்று தடையும் விதித்தது.

அய்யப்பன் கோவில் ''புனித்''தைக் காப்பதோடு, கேரள அரசியலின் ''தூய்மை''யைக் காப்பது என்ற புதிய கடமையும் போலி கம்யூனிஸ்டுகளுக்கு வந்துவிட்டது! ஏற்கனவே, 'மகர ஜோதி' காட்டி பக்தர்களை ஏய்க்கும் ''ஆன்மீக''ப் பணியையும் இந்தப் போலி கம்யூனிஸ்டுகளின் அரசு கடமை உணர்வோடு செய்து வந்திருக்கிறது. அதாவது, காலனி மற்றும் காங்கிரசு ஆட்சியாளர்களின் அடியொற்றி, கேரள அரசின் அதிகாரத்தின் கீழ் வரும் மின்வாரிய மற்றும் காட்டிலாகா அதிகாரிகளை போலீசுக் காவலுடன் ஆண்டுதோறும் சபரிமலைக்கு அனுப்பி, கற்பூரம் கொளுத்தி ''மகர ஜோதி'' காட்டி, அது அய்யப்பனின் மகிமையென்று நாடகமாடுவதைத் தொடர்ந்தார்கள். இப்போது சோபா கும்பலுடன் தனது கட்சி பிரமுகர்கள் உட்பட அரசியல் - அதிகாரிகளின் தொடர்பை மூடிமறைத்தும், சபரிமலையில் தந்திரியை மாற்றி, பரிகார பூசை நடத்தியும் போலி கம்யூனிஸ்டுகள் தமது சமூகக் கடமையாற்றுகிறார்கள்!

## போலி முத்திரைத் தாள் வழக்கு முக்கியப் புள்ளிகளைக் காப்பதற்கு சி.பி.ஐ. முயற்சி

போலி முதல் தகவல் அறிக்கை மோசடி சுண்டைக்காய் அளவுக்கு என்றால், போலி முத்திரைத்தாள் மோசடி சுரைக்காய் அளவுக்குப் பெரியது. 3,000 கோடி ரூபாய் முதல் 32,000 கோடி ரூபாய் அளவுக்கு இந்தப் போலி முத்திரைத் தாள் மோசடி நடந்திருப்பதாக பலவாறு மதிப்பிடப்படுகிறது. இதற்கு மேலும் நடந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. நாடு முழுவதும், முக்கியமாக 18 மாநிலங்களில் 72 நகரங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்திருக்கிறது.

ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, மகாராட்டிரம், உ.பி., மேற்கு வங்கம், ம.பி., பஞ்சாப் - அரியானா போன்ற முக்கிய பெரிய மாநிலங்களில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ. எம்.பிக்கள், உயர்மட்ட போலீசு அதிகாரிகள் வரை சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

மும்பையைச் சேர்ந்த அப்துல் கரீம் தெல்கிதான் போலி முத்திரைத்தாள் மோசடியின் சூத்திரதாரி என்று சொல்லப்படுகிறது. அவனுக்காக மகாராட்டிரம் மற்றும் தென் மாநிலங்களுக்கிடையிலான வலைப்பின்னலை உருவாக்கியவன் சேக் வாகீது என்பவன். தமிழ்நாட்டில் அவனுடைய முகவர் நிஜாமுதீன். கர்நாடகாவில் தெல்கியின் வழக்கறிஞர் அப்துல் ரஷீது குல்கர்ணி. இவர்களில் பலர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டும் ''மேலிட''த் தலையீடு காரணமாக வழக்கு எதுவுமின்றிப் பாதுகாப்பாக விடுதலை செய்யப்பட்டதோடு, தொழிலைத் தொடரவும் அனுமதிக்கப்பட்டனர்.

ஆந்திராவில் தெலுங்கு தேச அமைச்சர் சி.கிருஷ்ணா யாதவும் அவரது அடியாட்படையும் தெல்கியின் நம்பகமான கூட்டாளிகளாகச் செயல்பட்டு வந்தது 1999-லேயே தெரிய வந்தது. அமைச்சரின் பதவி பறிபோனாலும், மகாராட்டிர போலீசாரால் 2003- லேயே கைது செய்து விசாரிக்கப்பட்டாலும், தெலுங்கு தேச அரசு அவர்களுக்குப் பாதுகாவலாக நின்று வழக்கு எதுவும் பதியப்படாமல் காத்தது.


மும்பை மாநகர போலீசு ஆணையாளர் ஆர்.எஸ். சர்மா, ஐ.ஜி. சிரீதர் வாகலே உட்பட ஏழு உயர் போலீசு அதிகாரிகள் தெல்கியிடம் இலஞ்சம் பெற்றதாக வழக்குகள் உள்ளன. சிலர் கைதும் செய்யப்பட்டனர். மகாராட்டிரம் துலே தொகுதி


படிப்பகம்

www.padippakam.com

எம்.எல்.ஏ. அனில் கோரே, தெல்கியின் கூட்டாளியாக இருந்துள்ளார். அமைச்சர் அசோக்சவான் உதவியுள்ளார். போலீசு மந்திரியும் துணை முதல் மந்திரியுமான சகான் பூஜ்பால் போலீசு அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார்.

ஒரு சிறிய மோசடி வழக்கில் 1994-ஆம் ஆண்டு கைதாகிச் சிறையிலடைக்கப்பட்டிருந்த தெல்கி, அங்குதான் போலி முத்திரைத் தாள் மோசடித் தொழிலைக் கற்றுக் கொண்டான். ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட முத்திரைத்தாள்களை வாங்கி, மைகளை அழித்துவிட்டு விற்கும் தொழிலில் ஈடுபட்ட தெல்கி, 1995 ஆண்டு 16 இலட்சம் ரூபாய் மதிப்புடைய முத்திரைத்தாள் வழக்கு உட்பட 4 வழக்குகளில் சிக்கினான். ஆனால், மும்பை குற்றப்பிரிவு இணை ஆணையாளராக இருந்த சர்மா தயவினால் கைதாகாமல் தப்பினான்.



போலி முத்திரைத்தாள் விற்பனையில் ஈடுபட்ட குற்றக் கும்பல்களுக்கு உதவி புரிந்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் டி.ஐ.ஜி. முகம்மது அலி.

அதன்பிறகு பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய போலி முத்திரைத் தாள்களைப் பல வழிகளிலும் தயாரித்து, நாடு முழுவதும் பல முகவர்களை நியமித்து புழக்கத்தில் விட்டான். இரத்து செய்யப்பட்ட முத்திரைத்தாள்களை, இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி மைகளை அழித்துவிட்டு ''புத்தம் புதியதாக'' மாற்றி விற்பனை செய்தான். அரசு ரூபாய் நோட்டுக்களையும் முத்திரைத் தாள்களையும் அச்சிடும் நாசிக் அச்சகத்தையே பயன்படுத்தி கணக்கில் வராத முத்திரைத்தாள்களை ஏராளமாக அச்சிட்டு விற்பனை செய்தான். அரசு அச்சகத்தில் இருந்து அனுப்பப்படும் முத்திரைத்தாள் பார்சல்களை இடைமறித்துத் திருடி, தானே தனது முகவர்கள் மூலம் விற்பனை செய்தான். அரசு அச்சகத்தில் இருந்து எந்தெந்த ஊர்களுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புடைய முத்திரைத்தாள்கள் அனுப்பப்பட்டன, எவ்வளவு போய்ச் சேர்ந்தன, எவ்வளவு காணாமல் போயின என்ற விவரம் அரசிடம் கிடையாது; இது தெல்கிக்கு வசதியாகப் போய்விட்டது.

அரசு அச்சகத்திலிருந்தே, பழுதடைந்தது என்று ஏலம் விடப்பட்ட நான்கு அச்சு இயந்திரங்களையும் மூன்று துளை போடும் கருவிகளையும் வாங்கி, முன்னாள் அரசு அச்சக ஊழியர்களையே வைத்து ஏராளமாக முத்திரைத் தாள்கள் அச்சிட்டு, மும்பையில் மட்டும் 29 அலுவலகங்களைக் கொண்ட வலைப்பின்னலை உருவாக்கி விற்பனை செய்தான். இந்திய எண்ணெய்க் கழகம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற அரசுடைமை நிறுவனங்களுக்கே தனது முகவர்களை அனுப்பி 5 சதவீத கழிவு கொடுத்து அரசுக்கே நேரடி விற்பனையையும் செய்தான்.

அரசியல் கட்சி வேறுபாடின்றி நிதியை வாரி வழங்கியிருக்கிறான். அரசியல் பிரமுகர்களுக்கும் போலீசு அதிகாரிகளுக்கும் நட்சத்திர விடுதிகளில் விருந்து படைத்திருக்கிறான். இவனிடம் இலஞ்சம் வாங்கியே ஒரு கோடி ரூபாய் முதல் 100 கோடி ரூபாய் வரை சொத்துக்களைக் குவித்துள்ள மும்பை போலீசில் தனது கூட்டாளிகளைப் பிடிப்பது தெல்கிக்கு சிரமமே கிடையாது. ஜெயலலிதா-சசிகலா கும்பலின் ஏவலதிகாரியும் குற்றப் புலனாய்வும் பிரிவு டி.ஐ.ஜி.யுமான முகமது அலி, பல இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு தெல்கியின் முகவர் நிஜாமுதீனை வழக்குப் போடாமல் விடுதலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு பெரிய மோசடி செய்த தெல்கி, மும்பையில் ஐந்து நட்சத்திர வாழ்க்கை நடத்தி வந்தபோதும், அவனது முகவர்களிடமிருந்து பல கோடி ரூபாய் போலி முத்திரைத் தாள்கள் சிக்கியபோது எவ்விதப் பயமுமின்றி தொழிலைத் தொடர்ந்தான். மகாராட்டிரத் தொண்டு நிறுவனம் ஒன்றின் மூலம் இலஞ்ச ஊழல் எதிர்ப்பு இயக்கம் நடத்திவரும் பிரபல காந்தியவாதி அன்னா ஹசாரே, 2003-ஆம் ஆண்டு தொடுத்த ஒரு பொதுநல வழக்கின் கீழ் மும்பை உயர்நீதி மன்ற உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு, தெல்கி கும்பலின் மோசடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. தற்போது கர்நாடக போலீசாரால் கைது செய்யப்பட்டும் கூட, அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் சிறையிலும் நட்சத்திர வாழ்க்கை நடத்துகிறான், தெல்கி.

போலி முத்திரைத்தாள் மோசடி சூத்திரதாரி தெல்கிக்கு ஒரு பழக்கம் இருந்தது. அரசியல் பிரமுகர், போலீசு அதிகாரி யாருடன் பேசினாலும் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, உரையாடலைப் பதிவு செய்து வைத்துக் கொள்வான். அப்படிப் பதிவு செய்யப்பட்ட 13 குறுந்தகடுகளில் முதலில் நான்கை மட்டுமே வழக்கு மன்றத்தில் போலீசார் தாக்கல் செய்தனர். தெல்கியின் கோரிக்கையின் பேரில் மேலும் ஏழு தகடுகளை மட்டும் தாக்கல் செய்தனர். அவையும் தெளிவாக அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் நாசம் செய்துள்ளன. தெல்கியோடு வழக்குகளில் சிக்காமல் பல அரசியல் பிரமுகர்கள், போலீசு அதிகாரிகளைக் காப்பதற்கே இந்த முயற்சி நடக்கிறது.

•••

இவை மூன்றும் சிறிய அளவிலான குற்றவிவகாரங்கள் தாம். அரசியல்-கிரிமினல் குற்றக் கும்பல்களால் திட்டமிட்டு, அமைப்பு ரீதியில் நடைபெறும் குற்றவிவகாரங்களும் ஏராளமாக உள்ளன. அவை விதிவிலக்கின்றி சட்டம் மற்றும் நீதியின் காவலர்களால் மூடி மறைக்கப்பட்டு, குற்றவாளிகள் பெரிய மனிதர்களாக வலம் வருகிறார்கள். பங்கு பத்திர ஊழல் - மோசடிகள், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சம்பந்தப்பட்ட ஜெயின் டயரி விவகாரம், அரசியல் வாதிகள் - போலீசு அதிகாரிகள் - கிரிமினல்கள் அடங்கிய முக்கூட்டை அம்பலப்படுத்திய வோரா கமிட்டி அறிக்கை விவரங்கள், இன்றைய அரசியல் - சமூக அமைப்பு முழுவதும் புழுத்து நாறுவதையே காட்டுகின்றன.

• ஆர்.கே.

www.padippakam.com

# அரசு பயங்கரவாதம் – மத பயங்கரவாதத்தால்

# பிளவுபடும் மும்பய்

ரேஹான் அகமது ஷேக், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் (என்.ஆர்.ஐ.). அவர், தனது மனைவியோடும் இரண்டு குழந்தைகளோடும் கடந்த ஜூலை மாதம் 14-ஆம் தேதி இந்தியாவிற்கு வந்தார். அவர் மும்பய் சர்வதேச விமான நிலையத்தில் இறங்கிய மறுநிமிடமே, மைய அரசின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளாலும்; மகாராஷ்டிர போலீசு அதிகாரிகளாலும் சுற்றி வளைக்கப்பட்டு, மும்பய் குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர், அதிகாரிகளால் தொடர்ந்து பதினைந்து மணி நேரம் விசாரிக்கப்பட்டார். அவர் வேலை பார்க்கும் ருசிய நிறுவனம், ரேஹானைப் பற்றிய தகவல்களைத் தொலைவரி (Fax) மூலம் மும்பய் போலீசு அதிகாரிகளுக்கு அனுப்பிய பிறகும் விசாரணை நீடித்தது.

ரேஹான் முசுலீம் மதத்தைச் சேர்ந்தவர்; அதோடு அவர் தாடியும் வைத்திருந்ததுதான், அதிகாரிகளுக்கு அவர் தீவிரவாதியோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியதாம். விசாரணையின்பொழுது, ''நீங்கள் ஏன் தாடி வளர்க்கிறீர்கள்?'' என்பது அவரிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்வி. இதில் வேதனை கலந்த வேடிக்கை என்னவென்றால், ரேஹான், மும்பய்த் தொடர்வண்டி குண்டு வெடிப்பில் இறந்து போன தனது சகோதரர் அய்ஜாஸின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்குத்தான் இந்தியாவிற்கு வந்தார்.

இது விதிவிலக்காக நடந்துவிட்ட சம்பவம் அல்ல. கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்குள் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற, அல்லது வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்குத் திரும்பிய 1,500 முஸ்லீம்கள் தனியாக வடிகட்டப்பட்டு, தீவிரவாத எதிர்ப்பு போலீசு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டுள்ளனர். அந்த 1,500 முஸ்லீம்களுள் ரேஹானும் ஒருவர்.


''.... உள்ளூர் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடுவது ஒன்றே மும்பய் ஜூலை 11 போன்று, அதிகரித்துவரும் பயங்கரவாதத்தை முறியடிக்கக் கூடியது என்று இந்திய ஆளும் வர்க்கங்கள் நம்புகின்றன...'' என கடந்த இதழில் (பு.ஜ. ஆகஸ்டு'06) மும்பய் குண்டு வெடிப்பு பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். அந்த அரசு பயங்கரவாதம்தான் இப்பொழுது மகாராஷ்டிராவைச் சேர்ந்த முசுலீம் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

மும்பய்க்கு வேலை தேடி வரும் வங்காள தேச முஸ்லீம் அகதிகள் வசிக்கும் மாஹிம் பகுதியில், குண்டு வெடிப்பு நடந்த நான்காவது நாளே தேடுதல் வேட்டை நடந்தது. ஜூலை 15-ஆம் தேதி நள்ளிரவில் நடத்தப்பட்ட இந்தத் தேடுதல் வேட்டையில் 400 போலீசார் ஈடுபடுத்தப்பட்டனர். ஒவ்வொரு குடிசைக் கதவையும் இடித்துத் தள்ளிக் கொண்டு நுழைந்த போலீசார், 250-க்கும் மேற்பட்ட ஏழை முஸ்லீம்களை, உள்ளாடைகளோடு போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர். இதேபோல நௌபடா பகுதியில் 75 முஸ்லீம்களும்; பெஹ்ரம்படா பகுதியில் இருந்து 100 முஸ்லீம்களும் விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். மும்பய் மட்டுமின்றி, மகாராஷ்டிரா மாநிலம் முழுவதிலும், பீகாரிலும், மத்தியப் பிரதேசத்திலும் இது போன்ற தேடுதல் வேட்டையும், திடீர்க் கைதுகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

இந்திய முஸ்லீம் மாணவர் இயக்கம் (சிமி) தடை செய்யப்படுவதற்கு முன்பு அவ்வமைப்போடு தொடர்பில் இருந்த இளைஞர்கள்; மேற்காசியாவில் வேலை பார்த்துவிட்டு இந்தியா திரும்பியிருக்கும் முஸ்லீம்கள்; பாகிஸ்தானில் உறவினர் உள்ள முஸ்லீம்கள்; குஜராத் முஸ்லீம் படுகொலைக்குப் பிறகு அங்கிருந்து மும்பய்க்கு அகதிகளாக ஓடி வந்துள்ள முஸ்லீம்கள் என ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு அதில் சிக்கும் அனைவரையும் போலீசார் விசாரணைக்குத் தூக்கிக் கொண்டு வந்து விடுகின்றனர். ''இப்படி விசாரணைக்கு அழைத்துச் செல்லும்பொழுது பின்பற்ற வேண்டிய சட்ட வரையறைகள் எதனையும் நாங்கள் பின்பற்றுவதில்லை'' என மும்பய் போலீசார் வெளிப்படையாகப் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளனர்.

தீவிரவாத எதிர்ப்பு போலீசின் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் இருக்கும் நௌபடா பகுதியைச் சேர்ந்த சலீம் குரேஷி, ''குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் தலை சிதறி, கை-கால்கள் சிதறி இறந்தவர்களின் சடலங்களை போலீசார் தூக்கிப் போட முன்வரவில்லை. அதை நாங்கள் செய்தோம். காயம்பட்டவர்கள் இந்துவா, முசுலீமா என நாங்கள் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், மறுநாளே, காயம்பட்டவர்களை மருத்துவமனையில் கொண்டு சேர்ப்பதற்கு உதவிய எங்கள் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் போலீசார் இழுத்துச் சென்றுவிட்டனர். இப்பொழுது அவர்கள் மனம் படும்பாட்டினை நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா?'' எனக் குமுறுகிறார்.

முசுலீம், தாடி என்ற இரு அடையாளங்களுக்காக போலீசாரால் விசாரிக்கப்பட்ட ரேஹான் அகமது ஷேக் (வலது).




''நாங்கள் அனைவரும் குற்றவாளிகள் போலவும்; எங்கள் கைகள் அனைத்திலும் இரத்தக் கறை படிந்திருப்பது போலவும் இவர்கள் நடந்து கொள்கிறார்கள்'' என மனம் சோர்ந்து போய்க் கூறுகிறார், விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட தனது உறவினரின் விடுதலைக்காகக் காத்திருக்கும் முதியவர் ஒருவர்.

இந்த விடுதலை எப்பொழுது கிடைக்கும்? ரேஹானுக்குக் கிடைத்தது போல 15 மணி நேரத்திலும் கிடைக்கலாம்; இல்லை ஐந்தாறு நாட்

www.padippakam.com

கள் கூட ஆகலாம். ''சிமி''யோடு தொடர்பு கொண்டவர்கள் எனப் போலீசார் சந்தேகங்கொண்டால் விசாரணையில் இருந்து விடுதலையே கிடைக்காமலும் போகலாம்.



குண்டு வெடிப்பில் தொடர்புபடுத்த போதிய ஆதாரம் இல்லாததால், 18 வயதான ஷாரிக்கான் (வலது) ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொலைவழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது ஒரு ஏற்றுமதி ஆடை நிறுவனத்தில் தையல் கலைஞராக வேலை பார்த்துவரும் சஜித் அகமது, முன்பு ''சிமி'' அமைப்பில் இணைந்து செயல்பட்டு வந்திருக்கிறார். அவ்வமைப்பு தடை செய்யப்படுவதற்கு முன்பாகவே அதிலிருந்து விலகிவிட்ட சஜித் அகமது, தான் விலகிவிட்டதற்கான அனைத்து ஆதாரங்களையும் போலீசிடம் காட்டிய பிறகும், மும்பய் போலீசார் நம்ப மறுக்கின்றனர். எப்பொழுதெல்லாம் மகாராஷ்டிராவிலோ, நாட்டின் பிற பகுதியிலோ ''விரும்பத்தகாத'' சம்பவங்கள் நடந்தால், உடனே சஜித் அகமதுவை மும்பய் போலீசார் விசாரணைக்கு இழுத்து வந்து விடுகின்றனர். இப்பொழுதோ அவர் தீவிரக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளார்.

''சிமி அமைப்பில் இருந்து நான் விலகிவிட்டதை போலீசார் நம்ப மறுப்பதால், எனக்கு யாருமே வேலை கொடுக்கத் தயங்குகின்றனர். நான் வசிக்கும் பகுதியில் இருந்து ரொம்ப தூரம் தள்ளி வந்து, 3,000 ரூபாய் சம்பளத்தில் வேலை தேடிக் கொண்டேன். ரயில்களில் குண்டு வெடித்த பிறகு, போலீசார் அங்கும் வந்துவிட்டதால் அந்த வேலையும் பறிபோய் விட்டது'' என்கிறார், மற்றொரு இளைஞர்.

''சிமி'' அமைப்பில் இருந்த ஒரே காரணத்திற்காக மாதம் இருமுறை போலீசு நிலையத்திற்குச் சென்று முகத்தைக் காட்டிவிட்டுத் திரும்ப வேண்டிய கட்டாயத்தில் வாழும் பெரோஸ் ஷேக் என்ற இளைஞர், ''சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முகத்தைக் காட்டிவிட்டுத் திரும்புவதற்கு போலீசு நிலையத்தில் மணிகணக்கில் காத்துக் கிடக்க வேண்டியிருக்கும். அவர்கள் சொன்ன நேரத்திற்குப் பத்து-பதினைந்து நிமிடம் காலதாமதமாகப் போனாலோ, அந்தநாள் முழுவதும் அதிகாரியின் அழைப்புக்காகக் காத்துக் கிடப்பதிலேயே போய்விடும்'' என போலீசின் பழிவாங்கும் போக்கை விவரிக்கிறார்.

இவர்களைப் போல நூற்றுக்கணக்கான முசுலீம் இளைஞர்கள், ''சிமி''யில் இருந்த ஒரே காரணத்துக்காக போலீசாரால் விசாரணை என்ற பெயரால் பந்தாடப்படுவதாக, மும்பயில் இருந்து வெளியாகும், ''டைம்ஸ் ஆப் இந்தியா'' நாளிதழ் குறிப்பிடுகிறது. இந்தக் குண்டு வெடிப்புக்குப் பின் ஏறத்தாழ 200 முசுலீம் இளைஞர்கள் ''சிமி''யோடு தொடர்புடையவர்கள் என போலீசார் சந்தேகப்படும் ஒரே காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட விசாரணை - கைது - தேடுதல் வேட்டைகளால், குண்டு வெடிப்பு பற்றிய விசாரணை ஒரு அங்குலமாவது முன்னேறியிருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. குண்டு வெடிப்பு நடந்த இரண்டொரு நாட்களிலேயே, திரிபுரா மாநிலத்தில் வங்காள தேச எல்லையையொட்டிய பகுதியில், மகாராஷ்டிராவைச் சேர்ந்த 11 முஸ்லீம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ''குண்டு வைத்துவிட்டுத் தப்பிச் செல்ல முயன்ற பொழுது கைது'' என்பது போல இச்சம்பவம் போலீசாரால் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. விசாரணையின் முடிவில், இந்த இளைஞர்கள் மதப் பிரச்சாரம் செய்வதற்காக திரிபுராவிற்குச் சென்றது தெரியவந்தது.

பீகார் மாநிலத்தில் உள்ள கயாவில் முகம்மது அக்ரம் என்பவர் கைது செய்யப்பட்டார். குண்டு வைத்த தீவிரவாதிகளுள் ஒருவன் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் போலீசார் வெளியிட்ட புகைப்படத்தோடு, முகம்மது அக்ரமின் தோற்றம் ஒத்துப் போனதால், அவர் கைது செய்யப்பட்டதாக போலீசார் கூறினர். நான்கு நாட்கள் நடந்த விசாரணையின் முடிவில், அவர் மைசூரில் உள்ள ஒரு மதரசா பள்ளியில் வேலை பார்க்கும் ஆசிரியர் என்பது தெரிய வந்தது. எனினும், முகம்மது அக்ரம் தினந்தோறும் போலீசு நிலையத்திற்கு வர வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ்தான் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுள், 14 பேரைத்தான் முக்கிய குற்றவாளிகளாக மும்பய் போலீசு கருதுகிறது. இந்த 14 பேரும் தடை செய்யப்பட்டுள்ள சிமி அமைப்பின் முன்னாள் ஊழியர்கள் என போலீசார் கருதுகின்றனர். எனினும், இவர்களை மும்பய் குண்டு வெடிப்பு சம்பவத்தோடு தொடர்புபடுத்துவதற்கு காவல்துறையிடம் போதுமான ஆதாரம் இல்லை... போபாலில் கைதான 18 வயது ஷாரிக்கான் மீது அவன் சம்பந்தப்படாத ஐந்து வருடப் பழமையான கொலை வழக்கு போடப்பட்டுள்ளது'' என ஆர்.எஸ்.எஸ். சார்பு வார இதழான இந்தியா-டுடே போலீசாரின் விசாரணையை அம்பலப்படுத்தியிருக்கிறது. (இந்தியா-டுடே, தமிழ் பதிப்பு, ஆக.30, 2006, பக்.27)

''பொடா'' போன்ற வெளிப்படையான கருப்புச் சட்டம் தேவையில்லை. ஏற்கெனவே இருந்து வரும் கிரிமினல் சட்டங்களை வைத்துக் கொண்டே, தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் முசுலீம்கள் மீது அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட முடியும் என நிரூபித்துக் காட்டி வருகிறது காங்கிரசு கும்பல்.

•••

ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு இளம் பெண் மும்பய் போலீசு நிலையம் ஒன்றில் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதைக் கண்டித்து மும்பய் நகரமே கொதித்து எழுந்தது. ஆனால் இப்பொழுதோ, அப்பாவி ஏழை முஸ்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் இந்த அடக்குமுறைகளைக் கண்டு அமைதியாக இருக்கிறது. மும்பய் நகரம், மதரீதியாகப் பிளவுபட்டு வருவதுதான் இந்த அமைதிக்குக் காரணம். புறநகர் ரயில்களில் பயணம் செய்யும் சக முஸ்லீம் பயணிகளை நக்கலாகக் குத்திப் பேசும் அளவிற்கு; அதனைத் தடுக்காமல்

www.padippakam.com

வேடிக்கை பார்க்கும் அளவிற்கு மும்பய் நகரம் பிளவுண்டு கிடப்பதாகச் சில செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர். டாடா சமூகவியல் விஞ்ஞானக் கழகத்தில் இணைப் பேராசிரியராக வேலை பார்க்கும் அப்துல் ஷாபான், ''ஒவ்வொரு கலவரமும்; ஒவ்வொரு குண்டு வெடிப்பும் இந்தப் பிளவை ஆழப்படுத்திக் கொண்டே செல்வதை''த் தனது ஆய்வுக் கட்டுரைகளில் நிறுவியுள்ளார்.

''இது 'இந்தக்கள்' வசிக்கும் பகுதி; இது முஸ்லீம்கள் வசிக்கும் பகுதி என வெளிப்படையாக இந்தப் பிளவைக் காண முடியும். புதிது புதுதாக உருவாக்கப்படும் அடுக்கு மாடி குடியிருப்புகள், காலனிகள், புறநகர் பகுதிகள் மதரீதியாகவே உருவாக்கப்படுகின்றன. இப்படி மதரீதியாக உருவாக்கப்படும் காலனிகளை, உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் புனிதப்படுத்தியிருப்பதாக'' நமீதா தேவிதயாள் என்ற செய்தி கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்து-முஸ்லீம் மதங்களைச் சேர்ந்த இருவர் இணை பிரியாத நண்பர்களாகவோ, பள்ளித் தோழர்களாகவோ, விளையாட்டுத் துணையாகவோ இருப்பதை இப்பொழுது மும்பயில் அரிதாகவே பார்க்க முடிகிறது; இரு மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்த ''அமர்-அக்பர்-அந்தோணி'' கலாச்சாரத்தை இப்பொழுது ஊக்குவிப்பதில்லை. ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிந்து செல்வது இரண்டு மதங்களிலும் நடக்கிறது'' எனக் குறிப்பிடுகிறார், அவர்.

1992-க்கு முன்பு வரை, குஜராத்திகள், மார்வாடிகள், மராட்டியர்கள், உ.பி.முசுலீம்கள் எனப் பலதரப்பட்ட மதத்தினரும் இனத்தினரும் கலந்து வாழ்ந்து வந்த பகுதியாக நௌபடா இருந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த மும்பய்க் கலவரத்திற்குப் பின், நௌபடாவில் வசித்த ''இந்துக்கள்'' வெளியேறிச் சென்று விட்டனர்.

''அப்பொழுதெல்லாம் நௌபடா இவ்வளவு பிற்போக்குத்தனமாக இருந்ததில்லை. இப்பொழுதோ சில இளைஞர்கள் மேற்கத்திய பாணி உடைகளை அணிய மறுக்கின்றனர். இன்னும் சிலர் தாடி வளர்ப்பதையும், மதத்தை அடையாளப்படுத்தும் தொப்பி அணிவதையும் கட்டாயப்படுத்துகின்றனர்.''



விசாரணை என்ற பெயரில் மாஹிம் போலீசு நிலையத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள அப்பாவி முசுலீம்களைப் பார்த்துத் திரும்பும் அவர்களது உறவினர்கள்.

''அந்த இளைஞர்கள் என்னிடம் வந்து நான் பர்தா அணிய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். சாப்பாடு செய்வதற்குக் கூட என்னிடம் பணம் கிடையாது; முன்னூறு ரூபாய் செலவழித்து நான் பர்தா வாங்க வேண்டும் என்றால், அந்த முன்னூறு ரூபாயை நீங்கள் சம்பாதித்துக் கொடுங்கள் எனக் கூறிவிட்டதாக''ச் சொல்கிறார், கதூன் ஷேக் என்ற சமூக சேவகி.

மும்பயின் மேற்கே கோரேகாவ் புறநகர் பகுதியில் உள்ள ஜவஹர் நகர், பழமைவாத ஜைன மதத்தினரும், குஜராத்தி இந்துக்களும் நெருக்கமாக வாழும் இடம். இப்பகுதியைச் சேர்ந்த குண்டு வெடிப்பில் பலியானவர்களின் இறுதிச் சடங்கின்பொழுது, ''மோடியின் கீழ்தான் எங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமா?'' என அப்பகுதி மக்கள் பத்திரிகையாளர்களிடம் கேட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பின் பின் மும்பய் அமைதியாக இருந்த நாட்களில், ''முசுலீம்கள் அனைவரும் தீவிரவாதிகள் இல்லை என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால், தீவிரவாதி ஒவ்வொருவரும் முசுலீமாக இருப்பது ஏன்?'', ''இன்னும் கொஞ்ச காலத்தில் முசுலீம்களின் எண்ணிக்கை, இந்துக்களை எண்ணிக்கையைத் தாண்டிவிடும்'' - போன்ற இந்து மதவெறியைத் தூண்டிவிடும் செய்திகள், செல்போன் மூலமும், இ-மெயில் மூலமும் பல்லாயிரக்கணக்கானோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

''புகார்'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் சமீபத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில், ''மும்பயில் பாதுகாப்பற்ற இடம் எது?'' என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்குப் பெரும்பாலான ''இந்துப்'' பெண்கள், ''சிறுபான்மையினர் வசிக்கும் பகுதி'' எனப் பதில் அளித்துள்ளனர். ''அப்படி நீங்கள் கருதக் காரணம் என்ன?'' என்று கேட்டதற்கு, ''அங்குள்ள ஆண்கள் தாடி வைத்துக் கொண்டு, பார்ப்பதற்கு அச்சம் தரக் கூடியவர்களாக இருக்கிறார்கள்'' எனப் பதில் அளித்துள்ளனர். இது மட்டுமின்றி, ஈராக், பாலஸ்தீனம் பகுதிகளில் நடக்கும் போர் தொடங்கி உள்ளூர் பிரச்சினைகள் முடிய ஒவ்வொன்றிலும் மும்பையைச் சேர்ந்த முஸ்லீம்களும், இந்துக்களும் எதிர்எதிரான கருத்துக்களையே கொண்டுள்ளனர்.

1970-களில் மில் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டங்களால் சிவந்திருந்த மும்பய் நகரம், இப்பொழுது காவியையும், பச்சையையும் பூசிக் கொண்டு அருவெறுப்பாகக் காட்சி அளிக்கிறது. முஸ்லீம் தீவிரவாதிகளும், இந்துமத பயங்கரவாதிகளும் எது நடக்க வேண்டும் என விரும்பினார்களோ, அந்தப் பிளவு மும்பையில் ஆழமாகப் பரவி வருகிறது.

போலி கம்யூனிஸ்டுகள் தூக்கிபிடிக்கும் நேரு பாணி மதச்சார்பின்மை கொள்கை முற்றிலுமாகத் தோல்வியடைந்து விட்டதற்கு, மும்பய் நகரமே சாட்சி. மதவெறி பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்து நடத்தும்பொழுதுதான், முஸ்லீம் மதவெறியர்களை தனிமைப்படுத்த முடியும்; இந்து மதவெறி பயங்கரவாதத்தை நேருக்கு நேராகத் தாக்க முடியும். அதுவரை மும்பயில் நிலவும் அமைதியை, வெடிகுண்டின் திரி எரியும் பொழுது ஒருவித அமைதி நிலவுமே, அதோடு மட்டுமே ஒப்பிட முடியும்.

• செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# போலி சுதந்திரத்தைத் திரை கிழிப்போம்! மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!

## - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர்முழக்க ஆர்ப்பாட்டங்கள்

1947-இல் நாம் பெற்றது சுதந்திரமல்ல; அது போலி சுதந்திரம். வெள்ளைக்காரன் இந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்படவில்லை; தனது விசுவாசிகளான காங்கிரசிடமும் முஸ்லிம் லீகிடமும் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்தான். அந்தப் போலி சுதந்திரத்துக்கு வயது 60.

இன்று வாயளவில் சுதந்திரம் என்று பீற்றிக் கொள்வதற்குக் கூட வழியில்லாமல், வெளிப்படையாகவே நம் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன, ஏகாதிபத்திய வல்லரசுகள். தற்போது நம்மீது திணிக்கப்படும் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கையின் உண்மையான பொருள் மறுகாலனியாதிக்கம் என்பதுதான்.

கடந்த காலத்தின் காலனியாதிக்கக் கொடுமைகளைப் பூதக் கண்ணாடியால் பெருக்கிக் காட்டியதைப் போல இன்று நம் கண்முன்னே காட்சி தருகிறது மறுகாலனியாதிக்கம். இதற்கெதிராக நம்மைப் போராடத் தூண்டும் உந்து விசையாக, இந்திய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக 200 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளைக் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக வீரசமர் புரிந்திருக்கிறார்கள் தென்னகத்தின் வீரர்கள்; தமிழகத்தின் வீரர்கள்!

1801 ஜூன் மாதம் திருச்சியிலிருந்து சின்னமருது வெளியிட்ட பிரகடனம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்கே குரல் கொடுத்த இந்த அறிக்கைதான் முதல் விடுதலைப் போர்ப் பிரகடனம்! 1795-இல் வெள்ளையருக்கு எதிராக திப்புசுல்தான் நடத்திய போரில் தொடங்கி, 1806-இல் வேலூர்க் கோட்டைச் சிறையில் சிப்பாய்கள் நடத்திய புரட்சிவரை நீடித்த இந்தப் போர்தான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர்!

"விடுதலைப் போரில் முதல் குரல் எழுப்பிய தமிழகத்திலிருந்து இன்றைய மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போரும் துவங்கட்டும்! விடுதலைப் போராளிகளின் வரலாறு நம்மை முன்னோக்கிச் செலுத்தும் உந்து விசையாகட்டும்! 1800-01-இல் தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் இந்திய சுதந்திரப் போரின் மரபை உயர்த்திப் பிடிப்போம்! ஆகஸ்டு 15 போலி சுதந்திரத்தைத் திரைகிழிப்போம்! மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!" என்ற முழக்கங்களுடன் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கடந்த 14.8.06 அன்று தொடர் முழக்க ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

செங்கொடிகள் ஒளிர, முழக்க அட்டைகள் - பதாகைகள், விடுதலைப் போராளிகளின் உருவப் படங்களைக் கையிலேந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் சென்னை, திருச்சி, தஞ்சை, கோவை, மதுரை, கடலூர், சிவகங்கை, திருவாரூர், ஒசூர் ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. பல்வேறு பகுதிகளில் போலீசு அனுமதி தராமல் அடாவடி செய்ததால் ஆர்ப்பாட்டங்களை இவ்வமைப்புகள் நடத்த இயலவில்லை. வீரவணக்கப் பாடல்கள், இளஞ்சிறுவர்களின் புரட்சிகரப் பாடல்கள், மறைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வரலாறையும் காந்தி - காங்கிரசின் துரோக வரலாறையும் இன்றைய மறுகாலனியாதிக்கத்தின் கொடூரத்தையும் நாட்டு விடுதலைக்காக நாம் போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கிய முன்னணியாளர்களின் எழுச்சிமிகு உரைகள், கோக்-பெப்சியின் தண்ணீர்க் கொள்ளையை விளக்கும் நாடகம், உணர்ச்சிமிக்க முழக்கங்கள் - என போலி சுதந்திரத்தைத் திரைகிழித்து போராட அறைகூவுவதாக இந்த ஆர்ப்பாட்டங்கள் அமைந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஜனநாயக உணர்வும் கொண்ட பேராசிரியர்கள், வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள் - கலைஞர்கள், தொழிற்சங்க - விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

15.8.06 அன்று உசிலம்பட்டி வட்டார வி.வி.மு.வினர், இப்பகுதியில் வி.வி.மு.வை நிறுவப் பாடுபட்ட தோழர் நல்லு அவர்களின் நினைவு நாளையொட்டி, ஆரியப்பட்டி கிராமத்தில் கொடியேற்றி வீரவணக்க அஞ்சலி செலுத்தி போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி உரையாற்றியதோடு, செல்லம்பட்டி, கருமாத்தூர், செங்காணூரணி ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராட அறைகூவினர்.

திருச்சியில், 15.8.06 அன்று திருவரங்கம், உறையூர், அரவானூர், எடமலைப்பட்டிப் புதூர், திருவரம்பூர் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட 22 இடங்களில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் விடுதலைப் போராளிகளின் தியாக வரலாற்றை விளக்கியும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராட அறைகூவியும் தெருமுனைக் கூட்டங்களை இப்புரட்சிகர அமைப்புகளும் தோழமை சங்கங்களும் இணைந்து நடத்தின. அனைத்து இடங்களிலும் உழைக்கும் மக்கள் இப்பிரச்சாரத்தை உற்சாகமாக வரவேற்றதோடு, தேநீர், சோடா, உணவு, நன்கொடை என ஆர்வத்தோடு வழங்கி ஆதரித்தனர்.

ஆகஸ்டு 15 போலி சுதந்திரம்தான் என்று வாயளவில் பேசும் போலி கம்யூனிஸ்டுகளும் பிற அமைப்புகளும் அதை மக்களிடம் அம்பலப்படுத்தக் கூட முன்வராமல் முடங்கிவிட்ட நிலையில், புரட்சிகர அமைப்புகளின் இந்த ஆர்ப்பாட்டங்களும் தெருமுனைக் கூட்டங்களும் மறைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வரலாறை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, போலி சுதந்திரத்தைத் திரைகிழித்து, மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக நாட்டுப்பற்றுடன் போராட அணிதிரட்டும் விரிவான பிரச்சார இயக்கமாக அமைந்தன.

- பு.ஜ. செய்தியாளர்கள்.

போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி திருவாரூரிலும் (மேல்படம்) சென்னையிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள்.






www.padippakam.com

# எம்.ஜி.ஆர். - ஜெயா - விஜயகாந்த்

# மூன்றாவது கழிசடை அரசியல்வாதி!

தமிழ்நாட்டில் அரசியலுக்கும் சினிமாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவு எல்லோருக்கும் தெரிந்ததே. மற்ற மாநிலங்களிலும், மத்தியிலும் கூட சினிமாக்காரர்கள் அரசியலில் நுழைந்து, சிலர் வெற்றி பெற்று சில பதவிகளைப் பிடித்துள்ளனர். ஆந்திராவில் என்.டி.ராமாராவ் அரசியலில் குதித்த ஓரிரு ஆண்டுகளிலேயே முதல்வராகி, இரண்டாவது முறையும் முதல்வராகி, தனது சொந்த மருமகனாலேயே கவிழ்க்கப்பட்டு அரசியலில் செல்லாக் காசாகிப் போனார். சினிமா புகழ், பிரபலம் - கவர்ச்சி மட்டும் இருந்தால் போதாது, அரசியலில் ஞானசூனியமாக இருந்தால் என்னவாகும் என்பதற்கு என்.டி.ஆர். நல்ல முன்னுதாரணமாக இருந்தார்.

ஆனால், தமிழ்நாட்டில் அரசியலே சினிமா, சினிமாவே அரசியல் என்று இரண்டறக் கலந்து, கடந்த 40 ஆண்டுகளாக ஆட்டிப் படைக்கிறது. எது எதற்கோ வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா கொண்டாடும் நமது நாட்டில் விரைவில் அரசியலில் சினிமாவின் வெற்றியைக் கொண்டாடப் பொன் விழா நடத்தலாம்.

அண்ணாதுரையும், கருணாநிதியும் முதலில் சினிமாவில் அரசியலைப் புகுத்தி, மக்களிடையே தமது அரசியலுக்கு அடித்தள ஆதரவைத் திரட்டிக் கொண்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினர். எம்.ஜி.ஆரும் அவரது அரசியல் வாரிசு ஜெயலலிதாவும் சினிமாக் காட்சிகள், கவர்ச்சிகள், நடிப்புகளை அரசியலில் புகுத்தி, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அரசியல் அடித்தளம் எதுவும் தேவையில்லை என்பதை நிரூபித்தார்கள்.

ஆனால், அரசியலில் குதித்த எல்லா சினிமாக்காரர்களும் வெற்றி பெற்றார்கள் என்றும் சொல்ல முடியாது. எம்.ஜி.ஆரைப் பார்த்து அரசியலில் சாதிக்க முயன்ற சிவாஜி கணேசன் படுதோல்வி அடைந்தார். எம்.ஜி.ஆரைப் போலவே ஒரு நாயகனை உருவாக்கி அரசியல் ஆதாயம் தேட முயன்று, தனது மகன் மு.க. முத்துவைப் புகுத்திய கருணாநிதியே அம்முயற்சியில் படுதோல்வி கண்டார். எம்.ஜி.ஆருக்குப் பிறகு அரசியலில் குதித்த பாக்கியராஜ், டி.ராஜேந்தர் போன்றவர்களும் மண்ணைக் கவ்வினர். தனது சினிமா செல்வாக்கை வைத்து அரசியலில் வெற்றிக் கொடி நாட்டிவிடலாம் என்று சோதனை முயற்சியில் ஈடுபட்ட ரஜினி, ''சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும்'' என்று கூறி ஓடிப் போனார்.

எம்.ஜி.ஆர். இறந்துபோன பிறகு, இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரித்தனங்களால் ஜெயலலிதா அம்பலமாகிப் போன பிறகு, பார்ப்பன-பனியா ஆளும் வர்க்கத்தினரும் பிழைப்புவாத - பொறுக்கி அரசியல்வாதிகளும் மிகவும் நம்பிக்கை வைத்திருந்த ரஜினியின் அரசியல் நுழைவு முயற்சியும் தோற்றுப் போன பிறகு, அந்த இடத்தை நிறைவு செய்வதற்காக நடிகர் விஜயகாந்தைத் தெரிவு செய்துள்ளார்கள்.

**மூன்றாவது சக்தியாக முன்னிறுத்தப்படும் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்திலும் தனிநபர் துதி-வழிபாடு போன்ற பிற்போக்குத்தனங்கள்தான் நிரம்பிக் கிடக்கின்றன.**



''தேசிய முற்போக்கு திராவிடர் கழகம்'' என்பது நடிகர் விஜயகாந்த் கட்சியின் பெயர். தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க (DMK, AIADMK, MDMK, PMK) ஆகிய பெயர்களில் உள்ள எழுத்துக்களை உச்சரிக்கும் போது வரும் ஒலி தன் கட்சியின் பெயரிலும் இருக்கிறது (தே.மு.தி.க. - DMDK) என்பதற்கு மேல், அதன் பொருள் நடிகர் விஜயகாந்துக் குத் தெரியுமா? தெரியாது என்றால், எப்படிப்பட்ட அறிவிலி இந்த நாட்டை ஆளமுயற்சிக்கிறார்! தெரியும் என்றால், எத்தகைய பித்தலாட்டக்காரர் இந்த மக்களை எய்க்க எத்தணிக்கிறார்!

''திராவிடர் கழகம்'' என்பது பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, சமூக நீதி போன்ற கொள்கைகளை உள்ளடக்கியிருந்த இயக்கத்தைக் குறிக்கிறது. ''இந்திய தேசியம்'' என்ற கற்பிதத்துக்கு எதிராக ''தமிழ் தேசிய'' சுயநிர்ணய உரிமைக்காக நின்றது. ஆனால், நடிகர் விஜயகாந்தோ, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, ரஜினி ஆகிய சினிமாக்காரர்களைப் போன்றே ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பன - இந்துமதவாத தேசியத்தை ஏற்கக் கூடியவர். பாகிஸ்தான் எதிர்ப்பு - இந்திய தேசியவெறியைத் தூக்கிப் பிடிப்பவர் ''இசுலாமியத் தீவிரவாத எதிர்ப்பு'', அரசு பயங்கரவாதப் போராளி''யாகத் தன்னைச் சித்தரித்துக் கொண்டவர். தனிக் கட்சி துவங்குவதற்கு முன்புவரை காங்கிரசுக் கட்சியுடன் தன்னை அடையாளப்படுத்தியவர். தமிழ் நாட்டில் ''தமிழ், தமிழர், தமிழ்ப் பற்றாளர்'' என்பதாகப் பாசாங்கு செய்துகொண்டே, ஆந்திராவில் தனது மொழிமாற்றுப் படங்கள் ஓடவேண்டும் என்பதற்காகத் தனது தெலுங்கு சாதி அடையாளத்தை முன்னிறுத்தியவர்.

இப்போதும் தமிழர் என்பதற்குப் பதிலாக ''திராவிடர்'' என்ற பெயரைத் தனது கட்சிக்குத் தெரிவு செய்து கொண்டிருப்பதற்குக் காரணம் தனது சாதியையும் அதில் உள்ளடக்கிக் கொள்ள முடியும் என்பதுதான். ஏற்கெனவே தமிழ்நாட்டில் உள்ள நாயுடு சாதிச் சங்கத்தினரும் அவர்களின்



கட்சி மாறிகளின் சரணாலயம்: தி.மு.க.வில் எம்.எல்.ஏ. சீட் கொடுக்காததால், அதிலிருந்து விலகி தே.மு.தி.க.வில் இணையும் முகையூர் முன்னாள் எம்.எல்.ஏ., ஏ.ஜி. சம்பத்.

அமைப்பு பெயரில் இந்தத் ''திராவிடர்'' என்ற பெயரை சேர்த்துக் கொண்டுள்ளது கவனிக்கத்தக்கது. தனது மனைவி, மைத்துனர் என்று நெருங்கிய உறவினர்கள் சாதி-சனங்களையே கட்சி மற்றும் ரசிகர் மன்றப் பொறுப்புகளில் அமர்த்தி காரியங்களை நடத்தி வருகின்றவர்.

நடிகர் விஜயகாந்த் எப்படிப்பட்ட குறுகிய, பிற்போக்காளர் என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த விவரங்களே போதும். இருந்தபோதும் தனது கட்சிப் பெயரில் ''முற்போக்கு'' என்ற சொல்லையும் சேர்த்துக் கொண்டுள்ளார். அப்புறம் தேசிய முற்போக்கு தி.க. என்ற பெயரில் உள்ள தேசியமே கேள்விக்குரியது! விஜயகாந்த் ஏற்றுக் கொண்டிருப்பது ''இந்திய தேசியம்'' மட்டுமே. இந்த பார்ப்பன - பனியா இந்திய தேசியத்தைக் காப்பதற்கு அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுவதில் தவறில்லை என்று கருதுபவர்.

ஒருபுறம் கருணாநிதி தலைமையிலான அணி, மறுபுறம் ஜெயலலிதா தலைமையிலான அணி - இவை இரண்டுக்கும் மாற்றான, வேறான மூன்றாவது சக்தியாக நடிகர் விஜயகாந்தை பார்ப்பன-பனியா செய்தி ஊடகங்கள் முன்னிறுத்துகின்றன. நடிகர் விஜய்காந்தே வேறு சில செய்தி ஊடகங்கள் மூலமாக, மறைமுகமாக அப்படி ஒரு கருத்தைப் பிரச்சாரம் செய்கிறார் - இல்லை, இல்லை விளம்பரம் செய்கிறார். நடந்து முடிந்த தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் அனைத்துத் தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட விஜய்காந்த் கட்சி 25 இலட்சம் வாக்குகளைப் பெற்றது; பெரும்பான்மையான தொகுதிகளில் - தி.மு.க., அ.தி.மு.க. அணிகளின் வேட்பாளர்களுக்கு அடுத்த நிலையில் நடிகர் விஜயகாந்த் கட்சி வேட்பாளர்கள் வந்தார்கள்; சுமார் 100 தொகுதிகளில் அந்த இரு கட்சிகளின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிப்பதாக விஜய்காந்த் கட்சி வந்தது. தனித்துப் போட்டியிட்ட விஜயகாந்த் வன்னியர் செல்வாக்குமிக்க விருத்தாசலம் தொகுதியில் வெற்றியும் பெற்றார். இந்தக் காரணங்களைக் கூறித்தான் நடிகர் விஜய்காந்துக்கு தமிழகத்தில் மூன்றாவது சக்தி என்ற அங்கீகாரத்தை வழங்கினர்.

பிறகு, பிற கட்சிகளில் பதவி வாய்ப்புகள் கிடைக்காமல் போனவர்கள், ஓரங்கட்டி ஒதுக்கப்பட்டவர்கள், குறிப்பாக ஜெயலலிதாவின் உதிர்ந்த ''ரோமங்கள்'' நடிகர் விஜய்காந்தின் கட்சியில் போய்ச் சேரும் போதெல்லாம், அவர் மூன்றாவது சக்தியாக வளர்ந்து வருவதாக செய்தி ஊடகங்கள் ஊதிப் பெருக்கிக் காட்டுகின்றன. சில படித்த, படிக்காத பாமரர்கள் கூட கருணாநிதி, ஜெயலலிதாவைப் பார்த்தாகி விட்டது; காங்கிரசு, பா.ஜ.க. கூட மத்தியில் ஆட்சி நடத்திவிட்டன. ''வேறு யாராவது வந்தால் பரவாயில்லை'' என்கிற எதிர்மறையில் நடிகர் விஜயகாந்தைப் பார்க்கிறார்கள்.

நடிகர் விஜயகாந்தின் தானொரு ''கருப்பு எம்.ஜி.ஆர்.'' என்கிற விளம்பரத்தைக் கண்டு படிக்காத பாமரர்கள் ஏமாறுவதில் வியப்பு ஒன்றுமில்லை. வெள்ளை எம்.ஜி.ஆரையும், அவரது உடன்கட்டையையும் கண்டு ஏமாந்தவர்கள்தானே! ஆனால், படித்த பாமரர்களில் சிலர், நடிகர் விஜயகாந்தை மூன்றாவது சக்தியாக எண்ணுவதுதான் வேடிக்கையானது. இவர்கள் படித்தவர்கள், தங்களைத் தாங்களே அறிவாளிகள் என்று நம்புகிறவர்கள். ஆனால் தாங்கள் சார்ந்த தொழில் மற்றும் நுகர்வு - சொகுசு வாழ்க்கை தவிர வேறு எந்தத் துறையிலும் சிந்தனையைச் செலுத்த விரும்பாத - முயலாத மூளைச் சோம்பேறிகள். அதனால்தான், இந்த நாட்டை ஆளவேண்டியவர்கள் என்று தாங்கள் நம்பும் ஒரு தலைவரின் அரசியல் அடிப்படை - அறிவு - தகுதி - பின்னணி - வரலாறு என்னவென்று அலசி பரிசீலித்துப் பார்க்காமலேயே ''யாராவது புதியவர்கள் வந்தால் போதும்'' என்கிற முடிவுக்கு வருகிறார்கள்.

படித்த பாமரர்கள் தமது சொந்த காரியவாத நலன்களுக்காகக் கொண்டுள்ள அரசியலற்றவாதமே விஜயகாந்த் போன்ற தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான காரணமாக உள்ளது. படிக்காத பாமரர்கள் தங்கள் அறியாமை காரணமாக இந்த அரசியலற்றவாதத்தைப் பின் தொடர்ந்து செல்கிறார்கள். நடிகர் விஜயகாந்தும் அரசியல் இயக்கங்களால் புடம் போடப்பட்ட அணிகளைக் கொண்டு கட்சி நடத்தவில்லை. முகத்துதி பாடியே பிழைப்பு நடத்தும் சினிமாத் தொழில் ரீதியிலான ஒரு கும்பல், ரசிகர்மன்ற நிர்வாகிகள், கட்சி மாறிகளான பண்ருட்டி ராமச்சந்திரன் போன்ற காரியவாத - பிழைப்புவாத - பொறுக்கி அரசியல் பிரமுகர்கள் - இப்படிப்பட்டவர்கள்தான் விஜய்காந்த் கட்சியின் பிரமுகர்களாகவும், அணிகளாகவும் உள்ளனர். இவர்களெல்லாம் நம்பத்தகுந்தவர்கள் அல்லவென்பதால் நெருங்கிய குடும்ப உறவினர்களை நம்பியே கட்சி நடத்துகிறார். இப்படிப்பட்டவர்கள் கட்சி, ஆட்சி அதிகாரத்தை எப்படி நிர்வகிப்பார்கள் என்ற பார்வையின்றியே படித்த பாமரர்களும் ஏமாறுகின்றனர். இதையெல்லாம் நன்கு அறிந்து வைத்திருக்கும் பார்ப்பன - பனியா ஆளும் வர்க்க செய்தி ஊடகங்கள், எம்.ஜி.ஆர். - ஜெயலலிதாவைப் போன்று விஜயகாந்த் கட்சியை வைத்து ஜனநாயக நாடகமாட முடியும் என்பதால்தான், இதை ஒரு மூன்றாவது சக்தியாக முட்டுக் கொடுத்து ஊதிப் பெருக்குகின்றன.

உண்மையில் நடிகர் விஜய்காந்த் ஒரு மூன்றாவது சக்தியே கிடையாது. கொள்கை, சிந்தனை, செயல்பாட்டை வைத்துப் பார்த்தல், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றவர்களின் இன்னொரு பதிப்புதான்; அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவ - இந்திய தேசியவாதிதான். இவர்கள் எல்லாம் ஒரே வாக்கு வங்கியை குறிவைத்துதான் அரசியல் நடத்துகிறார்கள். அதனால்தான் இவர்களின் தனிநபர் பாசிச சர்வாதிகாரச் செயல்களுக்கு எதிராக கட்சிக்குள்ளும், அதன் ஆதரவு

வாக்காளர்களிடையேயும் எந்தவித சலசலப்பும் இல்லை. தான் "ஒரு கழுதையை நிறுத்தினால் கூட இந்த வாக்காளர்கள் ஆதரித்து வாக்களிப்பார்கள்" என்ற அரசியல் அணுகுமுறை தான் இவர்களுடையது.

இத்தகைய திமிர்த்தனமான, அடாவடியான அரசியல் அணுகுமுறையானது, தனது சொந்த பலத்தில் வெற்றி பெறுவதில்லை. போலி கம்யூனிஸ்டு, கள் காங்கிரசு, பா.ஜ.க. போன்ற பிற ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாத அரசியல் காரணமாகவே வெற்றி பெற முடிகிறது. கம்யூனிசம், தேசியம், இந்துத்துவம் என்று என்னதான் அவர்கள் பசப்பினாலும், தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு, ஒரு 4-5 சீட்டுக்கள் கூடுதலாகக் கிடைப்பது போன்ற சந்தர்ப்பவாத நலன்களுக்காகவே அரசியல் கூட்டுகளை உருவாக்கிக் கொண்டு, ஜெயலலிதாவை ஆட்சியில் அமர வைத்ததைப் போலவே நாளை விஜய்காந்தையும் ஆதரிக்கத் தயங்கமாட்டார்கள். அதனால்தான் இவர்களும் நடிகர் விஜயகாந்தும் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதைத் தவிர்த்து வருகின்றனர்.

சர்வதேச அரசியலையே அலசும் சூரப்புலிகள் என்று கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளாகட்டும், "தேசிய" அரசியலில் ஊறிப் போனவர்களாகப் பீற்றிக் கொள்ளும் காங்கிரசு, பா.ஜ.க.வினராகட்டும், ஜெயலலிதா, விஜயகாந்த் போன்றவர்களின் கவர்ச்சிவாதத் தயவிலேயே அரசியல் நடத்துபவர்களாக உள்ளனர். சினிமா அரசியலை எதிர்ப்பதாக அவ்வப்பொழுது சவடாலடிக்கும் இராமதாசு, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற திடீர்த் தலைவர்கள் கூட இந்த எதிர்ப்பு செலவில்லாத, உழைப்பில்லாத திடீர்ப் பிரபலமடைவதற்கான விளம்பரம் என்ற வகையிலேதான் இதைச் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத, பிழைப்புவாத, கவர்ச்சிவாத அரசியல் அனைத்திற்கும் உண்மையான மாற்று, புதிய ஜனநாயக அரசியல் முழக்கத்தின் அடிப்படையில் தமது சொந்தக் காலில் நின்று அடிமட்டத்தில் இருந்து அணிகளையும் சக்திகளையும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் புரட்சிகர இயக்கம் மட்டும்தான். அதனால்தான், எல்லோரையும் குறை சொல்லுபவர்கள், வறட்டுவாதிகள் என்றும், இன்னும் பலவாறும் அவர்கள் அனைவருமே புரட்சிகர இயக்கத்துக்கெதிராக அவதூறு செய்கிறார்கள்.

• மாணிக்கவாசகம்

## லெபனான்:

# அமெரிக்க-இஸ்ரேலிய பயங்கரவாதம் போருக்குப் பின்னே மேலாதிக்கம்

இயற்கை வளமும் இலக்கியச் செழுமையும் கொண்ட, கனவுகளின் தேசமாகச் சித்தரிக்கப்பட்ட லெபனான் இன்று நொறுங்கிக் கிடக்கிறது. "முறிந்த சிறகுகள்" வழங்கிய உலகப் புகழ் பெற்ற கவிஞர் கலீல் ஜிப்ரானின் லெபனான், இப்போது மீண்டும் சிறகுகள் முறிக்கப்பட்டு துடிதுடித்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஜூலை 13-ஆம் தேதியிலிருந்து இஸ்ரேலிய பயங்கரவாதிகள் லெபனான் மீது தொடுத்த ஆக்கிரமிப்புப் போரினால் மத்திய தரைக்கடலோரம் அமைந்துள்ள அச்சின்னஞ்சிறு நாடு உருக்குலைந்து வேதனையில் தத்தளிக்கிறது. தரைவழி, வான்வழி, கடல்வழி என இஸ்ரேலிய காட்டுமிராண்டிகள் நடத்திய மும்முனைத் தாக்குதலால் இதுவரை 1000-க்கும் மேற்பட்ட லெபனான் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பத்தாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடு வாசல்களை இழந்து பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

தலைக்கு மேலே சீறிப்பாயும் இஸ்ரேலிய போர் விமானங்கள் எப்போது தங்கள் மீது குண்டு வீசுமோ என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு லெபனான் மக்கள் தப்பியோடினார்கள். வாகன நெரிசலால் தெற்கு லெபனானிலுள்ள டயர் நகரம் திக்குமுக்காடிக் கொண்டிருந்தது. எங்கே தப்பியோடுவது, எங்கே தஞ்சமடைவது என்று புரியாமல் அலைபாயும் லெபனான் மக்கள் அண்டை நாடான சிரியாவுக்கு ஓடத் துடித்தார்கள். திடீரென குண்டு வீச்சுத் தாக்குதல். சிரியா நோக்கிச் செல்லும் சாலைகள் அனைத்தும் இஸ்ரேலிய பயங்கரவாதிகளால் நாசமாக்கப்பட்டுக் கிடக்கிறது.

தலைநகர் பெய்ரூத்தின் சர்வதேச விமான நிலையம் உள்ளிட்டு இதர விமான நிலையங்களும் விமான எரிபொருள் கிடங்குகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அறுபதுக்கும் மேற்பட்ட பெரிய பாலங்கள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மின்விநியோக நிலையங்கள், தொலைக்காட்சி கோபுரங்கள், தொழிற்சாலைகள், பால்பண்ணைகள், மருத்துவமனைகள், கல்விக் கூடங்கள், ஆம்புலன்சு வாகனங்கள் என அனைத்துமே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டுள்ளன. வெளி உலகிடமிருந்து லெபனான் முற்றாகத் துண்டிக்கப்பட்டு பசியும் பயமும் அவலமும் அந்நாட்டு மக்களைக் கவ்வியுள்ளது.

இனி எங்கே செல்வது, எப்படி உயிர் வாழ்வது என்று தெரியாமல் லெபனான் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். காயமுற்றவர்களை ஆம்புலன்சு வண்டியில் ஏற்றிச் செல்லும்போதுகூட இஸ்ரேலிய கிரிமினல்கள் குண்டுவீசி தாக்கியுள்ளனர். இனி எங்கு சென்றாலும் ஆபத்து என்று குவானா மலை கிராமத்திலுள்ள ஐ.நா. மன்ற அலுவலகத்தில் தஞ்சம் புகுந்த லெபனான் மக்கள் அனைவரும் இஸ்ரேலிய போர் விமானங்களின் கொத்துக்குண்டு தாக்குதலால் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். குண்டு வீச்சினாலும் நொறுங்கி விழுந்த கட்டிடங்களின் இடிபாடுகளிலும் சிக்கி மாண்டு போன 106 பேரில் பாதிக்கும் மேற்பட்டோர் இளங்குழந்தைகள்! அதிலே, பிறந்து 10 நாளான கைக்குழந்தையுடன் தாயும் கொல்லப்பட்ட கொடூரத்தைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறைத்தூதரான ஏசு, தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றி இக்கிராம மக்களுக்குப் பருகக் கொடுத்தாராம். இன்று அதே குவானா கிராமத்தில் இஸ்ரேலியக் காட்டுமிராண்டிகள் பச்சிளம் குழந்தைகளைக் கொன்று இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். குண்டு வீச்சுத் தாக்குதலால் துறைமுகங்களின் எண்ணெய் கிடங்குகள் வெடித்துச்சிதறி கடலெங்கும் எண்ணெய் மிதக்கிறது. மீன்களும் பறவைகளும் செத்து மிதக்கின்றன. "லெபனான் நாடு இதுவரை கண்டிராத மிகக் கொடிய சுற்றுச்சூழல் பேரழிவு இது" என்று பசுமை அமைதி இயக்கம் குற்றம் சாட்டுகிறது.

இத்தகையதொரு கொடூரமான காட்டுமிராண்டித்தனமான பயங்கர

www.padippakam.com

வாதப் போரை லெபனான் மீது இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டதற்குக் காரணம் என்ன? லெபனானின் தெற்கு பகுதியிலுள்ள ஷியா முஸ்லிம்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள ஹிஸ்புல்லா எனும் தீவிரவாத இயக்கத்தினர், கடந்த ஜூலை மாத மத்தியில், தமது பகுதியில் அத்துமீறி நுழைந்து தாக்கிய இஸ்ரேலிய டாங்கிப் படையைத் தகர்த்து, இரண்டு இஸ்ரேலிய சிப்பாய்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். அவர்களை விடுவிக்க வேண்டுமானால், இஸ்ரேலிய சிறைகளில் எவ்வித விசாரணையுமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீன அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று ஹிஸ்புல்லா குழுவினர் நிபந்தனை விதித்தனர். ''தீவிரவாதிகளின் இத்தகைய கோழைத்தனமான மிரட்டல்களுக்கு அடிபணிய மாட்டோம்; ஹிஸ்புல்லா குழுவினரை நசுக்கி அழிப்போம்'' என்று எச்சரித்து லெபனான் மீது ஜூலை 12-ஆம் தேதி முதல் 5 வார காலத்திற்கு பயங்கரவாத ஆக்கிரமிப்புப் போரை இஸ்ரேல் நடத்தியது.




போராளி குழுக்களும் தீவிரவாதக் குழுக்களும் பிணைக் கைதிகளாகச் சிலரைப் பிடித்துச் செல்வதும், தமது கோரிக்கைகளை நிறைவேற்றினால் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் என்று நிபந்தனை விதிப்பதும் புதிய விவகாரமல்ல. உலகெங்கும் பல்வேறு நாடுகளில் அடிக்கடி நடப்பவைதான். தமிழகத்தில் வீரப்பன் குழு கூட அத்தகைய நடவடிக்கையில் இறங்கியதை யாவரும் அறிவர். இதற்காக எந்த நாடும் மற்றொரு நாட்டின் மீது இஸ்ரேலைப் போல பேரழிவுப் போரைக் கட்டவிழ்த்து விட்டதாக வரலாறில்லை. இத்தகைய பயங்கரவாத-தீவிரவாதக் குழுக்களுக்கு எதிராகப் போர் தொடுப்பது நியாயம்தான் என்றால், அப்பயங்கரவாதக் குழு செயல்படும் நாட்டின் மீதும் அந்நாட்டு மக்கள் மீதும் போர் தொடுப்பதும் பேரழிவை விளைவிப்பதும் எந்த வகையில் நியாயமாகும்?

''ஆம்! நியாயமானதுதான்! பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடும் மக்களும் அதற்கான விலையைத் தந்துதான் தீரவேண்டும்'' என்று கொக்கரிக்கிறது பயங்கரவாத இஸ்ரேல். பயங்கரவாதிகளை ஆதரிக்கும் மக்களையும் பயங்கரவாதிகளாகவே கருத வேண்டும் என்கிறார் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர். அல் கொய்தா என்ற பயங்கரவாதக் குழுவை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆப்கானை ஆக்கிரமித்தது அமெரிக்கா. பேரழிவை விளைவிக்கும் கொடிய ஆயுதங்களை வைத்திருக்கும் பயங்கரவாத நாடு என்று கூறி ஈராக்கை ஆக்கிரமித்தது அமெரிக்கா. பயங்கரவாதக் குழு, பயங்கரவாத நாடு என்பதிலிருந்து இன்னும் ஒருபடி முன்னேறி ''பயங்கரவாத மக்கள்'' என்று கூறி தனது ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்துகிறது, அமெரிக்காவின் மேற்காசியப் பேட்டை ரௌடியான இஸ்ரேல்.

ஹிஸ்புல்லா இயக்கத்தினர் இரு இஸ்ரேலிய சிப்பாய்களைக் கடத்திச் சென்றதை பயங்கரவாத நடவடிக்கையாகவே கருதமுடியாது. இஸ்ரேலியச் சிறைகளிலும் சித்திரவதைக் கூட்டங்களிலும் 9000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் பிணைக் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 300 பேர் 18 வயதுக்கும் குறைவான இளஞ்சிறுவர்கள்; 100 பேர் பெண்கள். ஆண்டுக்கணக்கில் வதைபடும் இவர்கள் மீது வழக்கோ விசாரணையோ நடத்தப்படுவதில்லை. இவர்களை விடுவிப்பதற்கான பேச்சு வார்த்தை என்ற நிகழ்ச்சிநிரலைக் கூட ஏற்க மறுக்கிறது இஸ்ரேல். இந்நிலையில் மனிதஉரிமை - ஜனநாயக உரிமைகளை முற்றாக மறுத்து, பயங்கரவாத அடக்குமுறையையே தீர்வாகக் கொண்டுள்ள இஸ்ரேலின் சிப்பாய்களை ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றதை எவ்வாறு பயங்கரவாத நடவடிக்கையாகச் சித்தரிக்க முடியும்?

கடந்த 2000-வது ஆண்டு அக்டோபர் மாதத்தில் மூன்று சிப்பாய்களைப் பிடித்துச் சென்ற ஹிஸ்புல்லா இயக்கத்தினர், அவர்களது விடுதலைக்குப் பணயமாக இஸ்ரேலிய சிறையிலுள்ள பாலஸ்தீன அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரினர். அதை ஏற்று அப்போது ஏறத்தாழ 500 கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது. அதே போன்றதொரு பாலஸ்தீன கைதிகளின் விடுதலைக்காகத் திட்டமிட்டுத்தான் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் இப்போது இரு இஸ்ரேலிய சிப்பாய்களைப் பிடித்துச் சென்றனர்.

எனவே, இரு இஸ்ரேலிய சிப்பாய்களை ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பிடித்துச் சென்றதுதான் லெபனான் மீது இஸ்ரேல் போர் தொடுக்கக் காரணம் என்பதை முட்டாள்கள் கூட ஏற்க மாட்டார்கள். லெபனான் மீது இஸ்

**பிறந்து பத்து நாளே ஆன சிசு கூட இஸ்ரேலிய குண்டு வீச்சுக்குத் தப்பவில்லை. தனது தாயின் அரவணைப்பிலேயே இறந்து போன அந்தக் குழந்தை மற்றும் தாயின் சடலங்களை இடிபாடுகளிலிருந்து மீட்கும் பரிதாபம்.**



ரேல் காட்டுமிராண்டித்தன மான ஆக்கிரமிப்புப் போரைத் தொடுப்பதற்கு வேறு காரணம் இருக்கிறது. இரு இஸ்ரேலிய சிப்பாய்கள் பிடித்துச் செல்லப்பட்ட விவ காரம் அதற்கான ஒரு வாய்ப் பாக அமைந்துள்ளது.

லெபனானின் தெற்கு பகு தியில் செல்வாக்கு பெற்றுள்ள ஹிஸ்புல்லா இயக்கத்தைத் தாக்கி அழித்து முடமாக்கு வது; ஹிஸ்புல்லா போன்ற தீவிரவாத இயக்கங்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்ட தாகக் கூறி லெபனானை ஒடுக்கி தனது மேலாதிக்கத் தின் கீழ் கொண்டு வருவது; தம்மிடம் முரண்பட்டு நிற் கும் ஈரானையும் சிரியாவை யும் தாக்குவதற்கான முன் னோட்டமாகவும் எச்சரிக்கை விடுப்பதாகவும் இப்போரை நீட்டிப்பது; மேற்காசியா எனப்படும் தற்போதைய மத் தியக் கிழக்கு நாடுகளை புதிய எல்லைக ளுடன் மறுஒழுங்கமைப்பது - என்ற அமெரிக்க எஜமானர்களின் போர்த்தந் திர திட்டப்படியே அதன் அடியாளான இஸ்ரேல் இப்போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ''புதிய மத்தியக் கிழக்கை நிறுவும் நேரமிது; புதிய மத்தியக் கிழக்கு திட்டத்தை யார் ஏற்கவில்லை யானாலும் அவர்களை நிர்பந்தித்துப் பணியச் செய்வோம்'' என்று அமெரிக் காவின் நோக்கத்தை வெளிப்படையா கவே கூறியுள்ளார், அமெரிக்க வெளியு றவுச் செயலரான கண்டலீசா ரைஸ். அதாவது, இஸ்ரேலிலிருந்து பாலஸ் தீன மக்களை முற்றாக வெளியேற்று வது, லெபனான் உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளை ஷியா, சன்னி, அரபு கிறித்தவர் என மதப்பிரிவுகளின் அடிப் படையிலும் தேசிய இனச் சிறுபான்மை யினர் அடிப்படையிலும் கூறுபோடு வது, எண்ணெய் வளமிக்க வளைகுடா பிராந்தியத்தை விழுங்கி கேள்விக்கிட மற்ற மேலாதிக்கத்தை நிறுவுவது என்ற அமெரிக்காவின் திட்டப்படியே அதன் வேட்டை நாயான இஸ்ரேல் இக் கொலை வெறியாட்ட பேரழிவுப் போரை நடத்தியுள்ளது.



மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளின் மீது கொத்துக் குண்டுகளை வீசி அழிக்கும் இஸ்ரேலிய பயங்கரவாதம்.

இப்பேரழிவுப் போரை உடனடி யாக நிறுத்தக் கோரி உலகின் பல நாடு கள் ஐ.நா. மன்றத்திடம் வலியுறுத்திய போதிலும், அமெரிக்காவின் கைப்பா வையாகிவிட்ட ஐ.நா. மன்றம் உடனடி யாகத் தலையிடவோ, நடவடிக்கை எடுக்கவோ முன்வரவில்லை. அமெ ரிக்க - இஸ்ரேலிய பயங்கரவாதிகளின் ''புதிய மத்திய கிழக்குத் திட்டம்'' நிறை வேறுவதற்காக காலத்தை நீட்டித்து இழுத்தடித்தது. பின்னர் பிரெஞ்சு ஏகா திபத்தியத்தின் நிர்பந்தம் காரணமாக, ஒரு மாத காலத்திற்குப் பிறகு போரை உடனடியாக நிறுத்துமாறும், ஐ.நா. மன் றத்தின் 1701-வது தீர்மானத்தின்படி பன்னாட்டுப் படைகளைக் கொண்டு லெபனானின் தென்பகுதியைக் கண்கா ணித்து அமைதியை நிலைநாட்டப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ஏறத்தாழ 35 நாட்கள் காட்டுமி ராண்டித்தனமாகப் போர் தொடுத்த போதிலும், இஸ்ரேலிய பயங்கரவாதி கள் எந்த நோக்கத்திற்காக இப்போரை நடத்தினார்களோ அதிலே வெற்றி பெற முடியவில்லை. 23 டன் அளவுக்கு குண்டுகளும் ஏவுகணைத் தாக்குதல்க ளும் நடத்தி லெபனானின் தெற்குப் பகு தியையும் தலைநகர் பெய்ரூத்தையும் தரைமட்டமாக்கிய போதிலும், ஹிஸ் புல்லா இயக்கத்தினரை அழிக்கவோ முடக்கவோ முடியவில்லை. இஸ்ரே லிய பயங்கரவாதிகளின் முகத்தில் கரி பூசும் விதமாக, ஹிஸ்புல்லா இயக்கத் தலைவரான ஹசன் நஸ்ரல்லா, ''அல் ஜெசிரா'' தொலைக்காட்சிக்கு போர் நடந்து கொண்டிருந்தபோது கம்பீரமா கப் பேட்டியளித்தார்.

1982-இலிருந்து தொடர்ந்து 18 ஆண்டுகள் லெபனானை ஆக்கிர மித்து, ஹிஸ்புல்லா இயக்கத்தின் தொடர்ச்சியான தாக்குதலுக்குப் பிறகு 2000-வது ஆண்டில் வெளி யேறிய இஸ்ரேல், தற்போ தைய போரின் மூலம் ஹிஸ் புல்லா இயக்கத்தை முற்றாக அழித்தொழித்து தனது மேலா திக்கத்தை நிறுவி விட முடி யும் என்று கனவு கண்டது. அந்த ஆதிக்கக் கனவைத் தகர்த்தெறிந்து, ஹிஸ்புல்லா இயக்கத்தினர் வீரதீரமாகப் போரிட்டு, இஸ்ரேலிய பயங் கரவாதிகளைத் தடுத்து பின் வாங்கச் செய்துள்ளனர். 200-க்கும் மேற்பட்ட ''கத் யுஷா'' ஏவுகணைக் கொண்டு இஸ்ரேல் மீது எதிர்த்தாக்கு தல் நடத்தியதோடு மட்டு மின்றி, தரைப்படை மூலம் மூர்க்கமாகத் தாக்கும் போர்த் திறனிலும் அவர்கள் முன் னேறி இஸ்ரேலைக் கதிக லங்க வைத்துள்ளனர். ஒரு மாதத்துக்கும் மேலாகப் போரிட்டும் கூட இஸ்ரேலிய மேலாதிக்கத்தை நிறுவ முடி யாத ஆத்திரத்தில் இஸ்ரேலிய அமைச் சர்கள், இராணுவத்தின் மீது குற்றம் சாட் டுகின்றனர். இஸ்ரேலிய இராணுவத் தளபதிகளோ, ஆட்சியாளர்களின் அடி முட்டாள்தனமான போர் நடவடிக்கை யைச் சாடுகின்றனர். போரில் ஏற்பட்ட பின்னடைவானது இஸ்ரேலிய ஆளும் கும்பலிடையே பிளவையும் மோதலை யும் கிளறிவிட்டுள்ளது.

இஸ்ரேலின் இராணுவம் பிரம் மாண்டமானது; ஆற்றல் மிக்கது; அதை யாராலும் வெல்ல முடியாது என்ற மாயையை, ஏறத்தாழ 10,000 பேர் கொண்ட ஹிஸ்புல்லாவின் சிறிய படை தகர்த்தெறிந்துள்ளது. 1982-இல் நடந்த லெபனான் மீதான இஸ்ரேலிய ஆக்கிர மிப்பின்போது உருவான ஹிஸ்புல்லா இயக்கம், ஈரான், சிரியா நாடுகளின் ஆதரவோடு லெபனானின் தென்பகுதி யில் வலுவான சக்தியாக வேரூன்றி யுள்ளது. இஸ்ரேலுக்கு எதிரானதொரு போரிடும் குழுவாக மட்டுமின்றி, பள் ளிகள், மருத்துவமனைகள் - சுகாதாரப் பணிகள், கிராம நிர்வாகம் முதலான வற்றை தமது பொறுப்பில் இயக்கி வரு வதோடு, இளைஞர்களுக்கும் சிறுவர்க ளுக்கும் போர்ப் பயிற்சியும் அளித்து மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளது. 128 பேர் கொண்ட லெபனான் நாடா ளுமன்றத்தில் 14 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஹிஸ்புல்லா இயக்கத்தி னர், லெபனான் அரசியலிலும் செல் வாக்கு செலுத்தும் வலுவான சக்தியாக வளர்ந்துள்ளனர். ஷியா, சன்னி முஸ்

www.padippakam.com



போர் நிறுத்தத்திற்குப் பிறகு, லெபனானின் டயர் நகரத்திற்கு அருகிலுள்ள நாகுரா துறைமுகத்திற்கு வரும் ஐ.நா. படையைச் சேர்ந்த பிரான்சு நாட்டு வீரர்கள்: ஏகாதிபத்தியங்களின் மறைமுக மேலாதிக்க ஆக்கிரமிப்பு.

லிம் பிரிவினரிடையேயும், அரபு கிறித்துவர்களிடமும் அமெரிக்க -இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான ஐக்கியத்தையும் சாதித்துள்ளனர்.

அமெரிக்க - இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான வெறுப்பும் ஆத்திரமும் பொங்கி வழிவதாலும், ஹிஸ்புல்லா இயக்கம் மக்களிடம் ஆதரவு பெற்றுள்ளதாலும் தரைமட்டமாகிக் கிடக்கும் லெபனான் நகர வீதிகளில், மக்கள் தமது துயரத்தைத் துடைத்துக் கொண்டு ஹிஸ்புல்லாவின் போர்வெற்றியை பேருற்சாகத்தோடு கொண்டாடுகின்றனர். ஈரானிலும் சிரியாவிலும் உள்ள மக்கள் வெற்றி விழாக்களை வீதிகளில் நடத்துகின்றனர். சிரியாவின் அதிபர் மக்களுடன் வீதிக்கு வந்து ஹிஸ்புல்லாவின் வெற்றியை வாழ்த்தியுள்ளார். எகிப்து, ஜோர்டான், சௌதி அரேபியா ஆகிய நாடுகளில் ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலையும் மீறி வீதிகளில் திரண்ட மக்கள், வெற்றி ஊர்வலங்களை நடத்துகின்றனர். ஹிஸ்புல்லாவை ஆதரிக்க மறுத்த எகிப்து அதிபர் முபாரக், மக்கள் போராட்டங்களுக்குப் பிறகு தனது சகோதரரையும் அமைச்சரையும் லெபனானுக்கு அனுப்பி ஹிஸ்புல்லாவுக்குத் தமது அரசின் ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். அரபு மக்கள் இனியும் அமெரிக்க - இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையும் அரபு ஆட்சியாளர்களின் துரோகத்தையும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதையே இந்த வெற்றி ஊர்வலங்கள் உணர்த்துகின்றன.

மறுபுறம், பயங்கரவாத இஸ்ரேலைப் பின்வாங்கச் செய்து இப்போரிலே ஹிஸ்புல்லாக்கள் முதற்கட்ட வெற்றியை ஈட்டியுள்ள போதிலும், அதைத் தக்கவைக்கவோ உறுதிப்படுத்தவோ முடியாதபடி ஏகாதிபத்தியவாதிகள் புதிய சூழ்ச்சிகள் - சதிகளில் இறங்கியுள்ளனர். போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பது என்ற ஐ.நா. மன்றத் தீர்மானத்தின் பெயரால் பன்னாட்டுப் படைகளை அங்கு குவிக்கத் தீர்மானித்துள்ளனர். ஆப்கான், சோமாலியாவைத் தொடர்ந்து இப்போது லெபனானிலும் பன்னாட்டுப் படைகள் மேலாதிக்கம் செய்யக் கிளம்பியுள்ளன.

ஐ.நா மன்றத்தின் பெயரால் 15,000 பேர் கொண்ட பன்னாட்டுப் படைகளை அங்கு குவிப்பதும், போர் மூளாமல் கண்காணிப்பதும், ஈரான் மற்றும் சிரியாவிலிருந்து ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கு ஆயுத உதவி கிடைப்பதைத் தடுப்பதும் ஹிஸ்புல்லாவையும் லெபனான் மக்களையும் முடமாக்கும் மேலாதிக்க சதி நடவடிக்கையே ஆகும். போர் நிறுத்தம் - அமைதியின் பெயரால் மீண்டும் அங்கே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கும் ''புதிய மத்திய கிழக்கு திட்டத்தை'' சுற்றி வளைத்து செயல்படுத்துவதற்குமான ஏற்பாடுகளே நடக்கின்றன. இனவெறி பயங்கரவாத இஸ்ரேலுடனும் அமெரிக்காவுடனும் கூடிக் குலாவும் இந்திய அரசோ இப்பன்னாட்டு ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்கு விசுவாசமாக இந்தியப் படைகளை அனுப்பத் துடித்துக் கொண்டிருக்கிறது. இதே வழியில் இன்னும் பல ஏழை நாடுகள் இத்தகைய கைக்கூலி சேவை செய்யக் காத்து நிற்கின்றன.

ஏகாதிபத்தியவாதிகளின் இம்மேலாதிக்க சதிகளை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், இனியும் ஹிஸ்புல்லா இயக்கத்தினரும் அரபு மக்களும் வெற்றி பெருமிதத்தில் திளைத்திருக்க முடியாது. அரபு மக்களின் ஒற்றுமை, மதச்சார்பின்மை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, இதர ஏழை நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுடன் கூட்டிணைவு என்ற திசையில் முன்னேறினால் மட்டுமே, இப்போதைய முதற்கட்ட வெற்றியை தக்கவைத்துக் கொண்டு இறுதி வெற்றியைச் சாதிக்க முடியும். இதன்மூலம் மட்டுமே அரபு நாடுகளும் மக்களும் சுதந்திரத்தையும் அமைதியையும் சுவாசிக்க முடியும்.

● மனோகரன்

## ''காமவெறியன் லியாகத் அலியை தூக்கில் போடு!''
## — பெண்கள் விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டம்

திருச்சியில் கணினி மையங்களில் கல்லூரி மாணவிகளை ஆபாசப் படமெடுத்த காமவெறியன் லியாகத் அலியைத் தூக்கிலிடக் கோரி கடந்த ஜூன் மாதத்தில் பெண்கள் விடுதலை முன்னணி சுவரொட்டி பிரச்சார இயக்கத்தை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக, கடந்த ஜூலை 25-ஆம் தேதி லியாகத் அலி சார்பில் அவனை பிணையில் விடக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப் போவதை அறிந்து இவ்வமைப்பினர், அவனுக்கு பிணை வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தி, முழக்கத் தட்டிகளுடன் மனு கொடுக்கச் சென்றபோது, மனுவை வாங்க மறுத்த நீதிபதி, மனு வாங்கும் முறை கிடையாது என்று சட்டவாதம் பேசினார். இதைக் கண்டித்தும், ''காமவெறியன் லியாகத் அலியை பிணையில் விடாதே, தூக்கில் போடு!'' என்ற முழக்கங்களுடன் பெண்கள் விடுதலை முன்னணியினர் நீதிமன்ற வளாகத்திலேயே ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அரண்டு போன நீதித்துறையும் போலீசுத்துறையும் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கூறி அனைவரையும் கைது செய்தது. போலீசு நிலையத்திலும் முழக்கமிட்டு போராடியதால், மாலை வரை போலீசு நிலையத்திலேயே வைத்திருந்து பின்னர் அனைவரையும் விடுவித்தது. இப்போராட்டம் காரணமாக, காமவெறியன் லியாகத் அலிக்குப் பிணை மறுக்கப்பட்டுள்ளதோடு, பெண்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பு காரணமாக பிணை மறுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றமும் பதிவு செய்துள்ளது. இப்போராட்டம், பெண்கள் விடுதலை முன்னணியின் உறுதியையும் போர்க்குணமிக்க செயல்பாட்டையும் நிரூபிப்பதாக அமைந்தது.

- பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

www.padippakam.com

# வளர்ச்சியின் பெயரால் மறுகாலனியாதிக்கம்

ஏழை நாடுகளின் விவசாயத்திலும், தொழில்துறையிலும் தனியார்மயம் - தாராளமயத்தை எவ்விதத் தடையுமின்றி, இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்காக உலக வர்த்தகக் கழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. ''தோஹா வளர்ச்சித் திட்டம்'' என்று அழைக்கப்படும் இப்பேச்சு வார்த்தையில் ஒரு முடிவு எட்டும் பொருட்டு கடந்த ஜூலை மாதம் சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனீவா நகரில் உலக வர்த்தகக் கழகத்தின் கூட்டம் நடைபெற்றது. 149 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டு இருக்கும் உலக வர்த்தகக் கழகம், ஜெனீவா நகரில் நடத்திய இந்தக் கூட்டத்திற்கு, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய ஏகாதிபத்திய / பணக்கார நாடுகளும்; ஏழை நாடுகளுள் இந்தியாவும், பிரேசிலும் மட்டுமே கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தன.

உலக வர்த்தகக் கழகத்தின் ஜெனீவா கூட்டத்தில் ''தோஹா வளர்ச்சித் திட்டம்'' குறித்து ஒரு முடிவு எட்டப்பட்டால், அந்த முடிவை உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்கும் பிற ஏழை நாடுகளின் மீது திணித்து விடுவது; அதற்கு 'ஏழை நாடுகளின் பிரதிநிதி'களாகக் கலந்து கொண்ட இந்தியாவும், பிரேசிலும் பொறுப்பேற்றுக் கொள்வது என்பது இந்தக் கூட்டத்தின் இன்னொரு நோக்கம். எனினும், ஜெனீவா கூட்டம், உலக வர்த்தகக் கழகத்தின் எதிர்பார்ப்புக்கு மாறாக, எவ்விதமான முடிவுக்கும் வர முடியாமல் தோல்வியில் முடிந்து போனது.

இத்தோல்விக்கு அமெரிக்காதான் காரணம் என இந்தியா குற்றஞ் சுமத்தியுள்ளது. ''தனது நாட்டு விவசாயத்திற்கு வழங்கும் மானியத்தை குறைத்துக் கொள்ள மறுக்கும் அமெரிக்கா, இந்தியா போன்ற ஏழை நாடுகளின் விவசாயத்தையும், தொழில் துறையையும் அமெரிக்காவின் விருப்பத்துக்கு ஏற்பத் தாராளமயமாக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதால்'', இந்தியாவின் வர்த்தகத் துறை அமைச்சர் கமல்நாத், இக்கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அணுசக்தி ஒப்பந்தம் என்ற பெயரில், இந்தியாவை அமெரிக்காவின் அடியாளாக மாற்றிவிட்ட மன்மோகன் சிங் அரசு, உலக வர்த்தகக் கழகக் கூட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து வெளிநடப்பு செய்திருப்பதை நாமெல்லாம் கையைக் கிள்ளிப் பார்த்துவிட்டுத்தான் நம்ப வேண்டியிருக்கும்.

இது மட்டுமின்றி, ''நமது நாட்டு விவசாயிகளின் வாழ்க்கையோடு அமெரிக்கா விளையாடுவதை அனுமதிக்க முடியாது'' என பேட்டியும் கொடுத்திருக்கிறார், கமல்நாத். மகாராட்டிர மாநில பருத்தி விவசாயிகள் கொத்துகொத்தாகத் தற்கொலை செய்து கொண்டதை வேடிக்கைப் பார்த்தவர் பிரதமர் மன்மோகன் சிங். அவரின் சக அமைச்சர் ஒருவரின் வாயில் இருந்து வந்துவிழுந்த இந்த வார்த்தைகளைக் கேட்டு, பத்திரிகையாளர்களுக்கு மாரடைப்பு வராதது, அவர்கள் செய்த அதிருஷ்டம்தான்!

•••

ஜெனீவா பேச்சு வார்த்தையின் தோல்விக்கு, விவசாயத்தில் தாராளமயத்தைப் புகுத்துவதில் அமெரிக்காவுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையேயுள்ள இழுபறி மட்டும் காரணம் இல்லை. தமது நாடுகளின் விவசாயத் துறையில் தாராளமயத்தைப் புகுத்துவதில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையேயும் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக, மானியக் குறைப்பு, விவசாயப் பொருள் ஏற்றுமதி, மரபீணி மாற்றம் செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மீது ஐரோப்பா விதித்துள்ள தடை ஆகிய விவகாரங்களில் ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவுக்குச் சில சலுகைகளை வழங்கியிருந்தால், ஜெனீவா பேச்சு வார்த்தை சுமுகமாக முடிந்திருக்கும்; ஆகையால், கமல்நாத்தின் வெளிநடப்பை அளவுக்கு மீறி ஊதிப் பெருக்கக் கூடாது என வர்த்தகத் துறையின் முன்னாள் செயலாளர் எஸ்.பி. சுக்லா அம்பலப்படுத்தி இருக்கிறார். ஆனால், மன்மோகன் சிங் அரசோ, ஜெனீவா பேச்சுவார்த்தை தோல்வியை, ''அமெரிக்கா எது சொன்னாலும் தலையாட்டும் மந்தையல்ல இந்தியா'' எனக் காட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்கிறது.


உலக வர்த்தகக் கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை நாடுகள் தங்கள் நாட்டின் விவசாயத்திற்கு ஓர் ஆண்டிற்குக் கொடுக்கும் மொத்த மானியம் 16,65,200 கோடி ரூபாய் தான். ஆனால், அமெரிக்காவோ, 2005-ஆம் ஆண்டில் மட்டும் தனது நாட்டு விவசாயத்திற்குக் கொடுத்துள்ள மானியம் ஏறத்தாழ 88,000 கோடி ரூபாய். இதில் கடுகளவுகூடக் குறைக்க மறுத்துவரும் அமெரிக்கா, ஜெனீவா பேச்சு வார்த்தையின் பொழுது, தனது விவசாய மானியத்தை ஒரு இலட்சத்து மூவாயிரத்து ஐநூறு கோடி ரூபாயாக உயர்த்தப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஐரோப்பிய யூனியன், விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்காகக் கொடுத்து வரும் மானியத்தை 2013-ஆம் ஆண்டோடு நிறுத்திவிடப் போவதாக அறிவித்திருக்கிறது. அந்த ஏற்றுமதி மானியத்தை தற்பொழுதே நிறுத்தி விட்டால்கூட, ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆண்டொன்றுக்கு வழங்கும் விவசாய மானியம் ஏறத்தாழ மூன்று இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டி விடும்.

ஒரு ஜப்பான் விவசாயி ஆண்டொன்றுக்குச் சராசரியாகப் பெறும் மானியம் 15.18 இலட்சம் ரூபாய் எனக் கூறப்படுகிறது. ஆனால், கோடி கணக்கில் விவசாயிகள் வாழும் இந்தியாவிலோ, 2006-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள உர மானியம் வெறும் 985 கோடி ரூபாய்தான். இது, 2005-ஆம் ஆண்டு மானியத்தை ஒப்பிடும் பொழுது 32 கோடி ரூபாய் குறைவு. உணவு மானியத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஆண்டு விவசாயிகளிடமிருந்து 40 இலட்சம் டன் கோதுமை குறைவா


படிப்பகம்

www.padippakam.com



ஏழை நாடுகளின் விவசாயத்தைத் தாராளமயமாக்க உலக வர்த்தகக் கழகத்தில் நடக்கும் பேச்சு வார்த்தைகளை எதிர்த்து ம.பி. மாநிலத் தலைநகர் போபாலில் நடந்த விவசாயிகளின் ஆர்ப்பாட்ட பேரணி.

க்கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தாராளமயத்தை ஆதரிக்கும் பொருளாதார நிபுணர்கள் கூட, அமெரிக்க, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் வழங்கப்படும் விவசாய மானியத்தில், 60,000 கோடி ரூபாயை உடனடியாக நிறுத்திவிடலாம் என ஆலோசனை கூறுகிறார்கள். இந்த ஆலோனையை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் ஏற்று நடைமுறைப்படுத்தினால், ஏழை நாட்டு விவசாயிகளின் வாழ்க்கையில் தலைகீழ் மாற்றம் வந்துவிடுமா என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி.

''ஏகாதிபத்திய நாடுகள், விவசாய மானியத்தில் 36 சதவீதத்தை வெட்டினால், அதன் மூலம், அந்நாடுகளுக்கு 24,750 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும். தென் அமெரிக்கா மற்றும் கிழக்காசியாவைச் சேர்ந்த சில ஏழை நாடுகளைத் தவிர, பிற கண்டத்து ஏழை நாடுகளின் விவசாயம் பாதிக்கப்பட்டு வருமான இழப்பு ஏற்படும். குறிப்பாக, இந்தியாவிற்கு 1,890 கோடி ரூபாய் அளவிற்கு வருமான இழப்பு ஏற்படும்'' என அமெரிக்காவைச் சேர்ந்த ''சர்வதேச அமைதிக்கான கார்னேகி அறக்கொடை'' நிறுவனம் கணித்திருக்கிறது.

உலக வங்கி வெளியிட்டுள்ள ஒரு ஆய்வறிக்கையில், ''தோஹா வளர்ச்சி பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்தால், அதனால் ஏழை நாட்டைச் சேர்ந்த ஒரு விவசாயிக்கு, ஆண்டொன்றுக்கு 90 ரூபாய் கூடுதலாக வருமானம் கிடைத்தாலே பேரதிருஷ்டம்தான்'' எனக் குறிப்பிட்டுள்ளது. இதனை வளர்ச்சி என்று கூறுபவர்கள் ஒன்று முட்டாள்களாக இருக்க வேண்டும்; இல்லையென்றால், தந்திரக்காரப் பேர்வழிகளாக இருக்க வேண்டும்.

•••

**உ**லக வர்த்தகக் கழகத்தின் தலைவர் பாஸ்கல் லாமே முன்வைத்துள்ள ஒரு சமரசத் திட்டத்தின்படி, ஏகாதிபத்திய நாடுகள் விவசாய மானியத்தில் 36 சதவீதத்தைக் குறைத்தால், இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் விவசாயப் பொருட்கள் மீது விதிக்கும் இறக்குமதி தீர்வையையும் 36 சதவீதம் குறைக்க வேண்டும்.

இந்தியாவில் தற்பொழுது விவசாயப் பொருட்கள் மீது 40 சதவீதம் முதல் 300 சதவீதம் வரை இறக்குமதி தீர்வை விதிக்கப்படுகிறது. உலக வர்த்தகக் கழகம் முன்வைத்துள்ள சமரச ஏற்பாட்டின்படி தோஹா பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தால், சில விவசாயப் பொருட்களின் மீது 10 சதவீதம் இறக்குமதித் தீர்வையைக் கூட இந்திய அரசால் விதிக்க முடியாமல் போகும். சராசரி இறக்குமதி தீர்வை தற்பொழுதுள்ள 115 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாகச் சரிந்து விழுந்துவிடும். இந்தக் குறைப்பு, மேலை நாட்டு விவசாயப் பொருட்களின் குப்பைத் தொட்டியாக இந்தியாவை மாற்றுவதோடு, எதிர்காலத்தில் உணவுக்கே மேலைநாடுகளிடம் கையேந்தி நிற்கக் கூடிய அபாயகரமான நிலையை உருவாக்கி விடும்.

ஆனால், வர்த்தகத் துறை அமைச்சர் கமல் நாத்தோ, ''அப்படியொரு அபாயம் வந்தால், அதில் இருந்து தற்காத்துக் கொள்ள, உலக வர்த்தக் கழகம் ஏழை நாடுகளுக்குச் சில உரிமைகளைத் தந்திருக்கிறது. இறக்குமதியைத் தடை செய்யலாம்; இறக்குமதி தீர்வையை அதிகப்படுத்தலாம்'' என அடுக்கிக் கொண்டே போகிறார். ஆனால், இந்தப் ''பாதுகாப்பு கவசங்களே'' ஏழை நாடுகளிடம் இருக்கக் கூடாது எனக் கட்டாயப்படுத்துகிறது, அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த நிர்பந்தம் ஒருபுறம் இருக்கட்டும்; இந்த பாதுகாப்பு கவசத்தைப் பயன்படுத்தி, அமெரிக்காவில் இருந்து மலிவு விலையில் இறக்குமதி செய்யப்படும் பருத்திக்குத் தடை விதித்து, அதன் மூலம் விதர்பாவைச் சேர்ந்த பருத்தி விவசாயிகளை இந்திய அரசு காப்பாற்றியிருக்கலாமே? அப்படித் தடை போட்டுவிடாமல், மன்மோகன் சிங்கின் கையைக் கட்டிப் போட்டது யார்?

உள்நாட்டில் விளைந்த கோதுமையைக் கொள்முதல் செய்யாமல், ஆஸ்திரேலியாவில் இருந்து புழுத்துப் போன கோதுமையை மத்திய அரசு இறக்குமதி செய்ததே, அது ஏன்? அந்த புழுத்துப் போன கோதுமையை இறக்குமதி செய்வதற்காக, உணவுப் பொருள் இறக்குமதி சட்டத்தை மாற்றியமைத்தார்களே, அதற்கு என்ன அவசியம் வந்தது? எந்த விவசாயியைக் காப்பாற்ற இவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள்?

இந்தக் கேள்விகளுக்கான பதிலைத் தேடினால், அந்தப் பதில் மன்மோகன் சிங் - ப.சிதம்பரம் கும்பலின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தை அம்பலப்படுத்திக் காட்டும். ''வளர்ச்சி'' என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் தொடுக்கும் மறுகாலனியத் தாக்குதலில் இருந்து நமது நாட்டு விவசாயத்தையும், மக்களையும் காப்பாற்ற இந்த அடிவருடி கும்பலையா நம்பியிருக்க முடியும்?

• ரஹீம்

www.padippakam.com

## திருச்சிற்றம்பலத்தில் தேவாரம் - திருவாசகம் பாடத் தடை

# மனுநீதித் தீர்ப்பு

சிதம்பரம் - நடராஜர் கோவில் கருவறையின் எதிரே அமைந்துள்ள திருச்சிற்றம்பல மேடையில் தமிழில் தேவாரம் - திருவாசகம் பாடுவதை தில்லை வாழ் தீட்சிதர்கள், சாதிவெறி கொண்டு தடுத்து வருவதையும்; அப்பார்ப்பனக் கும்பலின் விருப்பத்துக்கு ஏற்ப சிதம்பரம் உரிமையியல் நீதிமன்றம், சிவனடியார் ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையேறித் தேவாரம் - திருவாசகம் பாடுவதற்கு இடைக்கால தடை விதித்திருந்ததையும்; அத்தடையை மீறி ஆறுமுகசாமி பாடச் சென்ற பொழுது, அவரையும், அவருக்கு ஆதரவாகச் சென்றவர்களையும் கோவில் வாசலைக்கூட நெருங்க விடாமல் தடுத்து போலீசார் கைது செய்ததையும் கடந்த இதழில் விரிவாக எழுதியிருந்தோம். தமிழ் மொழியின் சுயமரியாதையைக் காக்க, சிறு பொறியாக எழுந்த அந்தப் போராட்டம், இப்பொழுது மக்கள் இயக்கமாக வளர்ந்து வருகிறது.

போலீசையும், நீதிமன்றத்தையும் கைத்தடியாக வைத்துக் கொண்டு பீதியூட்டினால், போராட்டம் பிசுபிசுத்துப் போய்விடும் என தீட்சிதர் கும்பல் கனவு கண்டது. ஆனால், தமிழுக்காகப் போராடுபவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும்; நீதிமன்றம் - போலீசின் பார்ப்பனக் கைக்கூலித்தனத்தை அம்பலப்படுத்தியும் உடனடியாக எடுக்கப்பட்ட சுவரொட்டி இயக்கமும்; அதனைத் தொடர்ந்து நடந்த தெருமுனைப் பிரச்சாரம், கண்டனப் பொதுக்கூட்டம் ஆகியவையும் தீட்சிதர்களின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டன.

சிதம்பரம் நடராசர் கோயிலில் தமிழில் தேவாரம் - திருவாசகம் பாடச் சென்ற சிவனடியார் ஆறுமுகசாமியைத் தாக்கியும் தடுத்தும் வெறியாட்டம் போடும் தீட்சிதர் பார்ப்பனர்களைக் கண்டித்து, ஆகஸ்டு 5 அன்று, சிதம்பரம் - மேலவீதியில் உள்ள பெரியார் திடலில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்பாக, இப்பிரச்சினையை விளக்கி சிதம்பரம் நகரின் முக்கிய இடங்களிலும் மற்றும் அண்ணாமலை நகர், குமுடிமூலை, கீரப்பாளையம், புத்தூர், காட்டுமன்னார் கோயில், சேத்தியாத்தோப்பு ஆகிய பகுதிகளிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மனித உரிமை பாதுகாப்பு மையம் ஒருங்கிணைத்து நடத்திய இத்தெருமுனைக் கூட்டங்களில் விடுதலைச் சிறுத்தைகள், திராவிடர் கழகம், சி.பி.எம்., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய அமைப்புகளும்; வழக்குரைஞர்கள் திருமார்பன், கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இத்தெருமுனைக் கூட்டங்களில், தமிழையும், தமிழனையும் இழிவுபடுத்தும் தீட்சிதர்களின் சாதித் திமிரும்; அக்கும்பல் தங்களின் காமவெறி களியாட்டங்களுக்கு நடராஜர் கோவிலைக் கேடாகப் பயன்படுத்தி வருவதும் அம்பலப்படுத்தப்பட்டது.

கண்டனப் பொதுக்கூட்டத்தின் அவசியத்தை விளக்கி கடலூர் மாவட்டம் முழுவதும் பேருந்துப் பிரச்சாரம் செய்யப்பட்டதோடு, பொதுமக்கள் மத்தியில் 25,000 துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன; 1,000-க்கும் அதிகமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

சிவனடியார் ஆறுமுகசாமி முன்னிலை வகிக்க, மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் இராசு தலைமையில் ஆகஸ்ட் 5 அன்று நடந்த கண்டனப் பொதுக்கூட்டத்தில், முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. வீ.வீ.சுவாமிநாதன்; பா.ம.க.வின் மாநிலத் துணைத் தலைவர் திரு. வீ.எம்.எஸ்.சந்திரபாண்டியன்; பா.ம.கவின் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன்; தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கடலூர் மாவட்டத் தலைவர் தோழர் பால்கி; சி.பி.எம்.இன் கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் செ.தனசேகரன்; சி.பி.ஐ.இன் கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் மணிவாசகம்; விடுதலைச் சிறுத்தைகள் - இணைப் பொதுச் செயலாளர் தோழர் மா.செ.சிந்தனைச் செல்வன்; திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் தோழர் துரை சந்திரசேகரன்; விடுதலைச் சிறுத்தைகள் - கடலூர் மாவட்டச் செயலர் தோழர் இரா. காவியச் செல்வன்; கடலூர் நகரத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேரா. இரா.ச.குழந்தைவேலனார் மற்றும் ம.க.இ.க. மாநில இணைப் பொதுச்

**ஆறுமுகசாமி தேவாரம் பாட விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கக் கோரி, (தீர்ப்பு வருவதற்கு முன்) நடந்த ஆர்ப்பாட்டம்.**



www.padippakam.com

செயலாளர் தோழர் காளியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

"சிவனடியார் ஆறுமுகசாமி தனியொரு ஆளில்லை; அவருக்குப் பின்னே தமிழ் ஆர்வலர்கள் திரண்டுள்ளனர்" எனச் சுட்டிக் காட்டப்பட்ட இப்பொதுக்கூட்டத்தில், "சிதம்பரம் நடராஜர் கோவிலை தீட்சிதர்களின் கைகளில் இருந்து பிடுங்கி மக்கள் சொத்தாக மாற்ற வேண்டும்; ஆலயத்தை முற்றுகையிடும் மக்கள் போராட்டத்தை நடத்த வேண்டும்" என்ற கருத்துகளும் வலியுறுத்தப்பட்டன. 2,500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தன்னார்வத்தோடு திரண்டு வந்து பங்கேற்ற இக் கண்டனப் பொதுக்கூட்டத்தில், ம.க.இ.க. - மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

"திருச்சிற்றம்பல மேடையில் தமிழில் தேவாரம் - திருவாசகம் பாட வேண்டும்" என்ற ஆறுமுகசாமியின் கோரிக்கைக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகுவதைக் கண்டு ஆடிப்போன தீட்சிதர் கும்பல், தில்லை திருமறைக் கழகம், அர்த்தஜாம சிவபுராணக் குழு போன்ற "லெட்டர் பேடு" அமைப்புகளில் புகுந்து கொண்டு, ஒரு கலந்துரையாடல் கூட்டத்தை சிதம்பரத்தில் நடத்தியது. தீட்சிதர்களே பசை வாளியைத் தூக்கிக் கொண்டு போஸ்டர் ஒட்டி நடத்திய இக்கலந்துரையாடல் கூட்டத்தில், பார்ப்பன பாதந்தாங்கிகளைத் தவிர வேறு யாரும் கலந்து கொள்ளவில்லை. "தேவாரம் பாட வேண்டும் என வீண் விவகாரம் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்" எனப் பேசி வன்முறையைத் தூண்டி விட இக்கலந்துரையாடலைப் பயன்படுத்திக் கொண்டது. தீட்சிதர் கும்பல்.

இதுவொருபுறமிருக்க, ஆறுமுகசாமிக்கு எதிராக தீட்சிதர்கள் தொடுத்த வழக்கை, ஊறப் போடும் விதத்தில் நீதிமன்றம் மெத்தனமாக நடந்து கொண்டது. இதனைக் கண்டித்தும், ஆறுமுகசாமி தேவாரம் பாட விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்க வேண்டும்; வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் எனக் கோரியும் 28.7.06 அன்று நீதிமன்றத்தின் முன் திடீர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ்வழக்கு விசாரணையின் பொழுது, "ஆறுமுகசாமி கால பூஜை நேரத்தில் தேவாரம் - திருவாசகம் பாடப் போவதாகக் கூறுகிறார். அதனால்தான், அவர் பாடத் தடை விதிக்கக் கோருகிறோமேயன்றி, எங்களுக்கு வேறு உள்நோக்கம் இல்லை" என தீட்சிதர் கும்பல் நியாயவான்களைப் போல வாதாடினர். இதற்குப் பதில் அளித்த ஆறுமுகசாமி தரப்பு வழக்குரைஞர்கள், "பூஜை நேரத்தில் தேவாரம் - திருவாசகம் பாடக் கோரமாட்டோம் என இங்கேயே எழுதித் தந்து விடுகிறோம். மற்ற நேரங்களில் ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையேறிப் பாடுவதைத் தடுக்கக் கூடாது" எனக் கூறி, தீட்சிதர்களின் பாசாங்கை அம்பலப்படுத்தினர்.

ஆனால், ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையேறித் தேவாரம் - திருவாசகம் பாடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை, நிரந்தரத் தடையாக மாற்றி வெளிவந்திருக்கும் உரிமையியல் நீதிமன்றத் தீர்ப்போ, எவ்விதப் பாசாங்கும் இன்றி அப்பட்டமாகத் தீண்டாமையைத் தூக்கிப் பிடிக்கிறது.

"தீட்சிதர்களைத் தவிர்த்து மற்றவர்களையும் பாட அனுமதித்தால் அந்தத் திருக்கோயிலின் புனிதத் தன்மை கெட்டு விடும்; கோயிலுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நட்டமும் ஏற்படும். எதிர்மனுதாரர் ஆறுமுகசாமியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் திருச்சிற்றம்பல மேடையில் கலவரம் ஏற்பட வாய்ப்புண்டு. கனகசபை மீது ஏறி நின்று பாடுவதற்கு தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஐதீக நடைமுறை, பழக்க வழக்கம் தடையாக உள்ளது. அப்படி பாட முற்பட்டால் அது கோயிலின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறிய செயலாகும்."

"மீண்டும் மீண்டும் அவர் திருச்சபையில் பாடவேண்டும் என்று பலருடைய கெட்ட துர்போதனைகளின் மூலமாகச் செயல்பட்டு வருவது நன்கு தெரிகிறது. கடலூர் மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு மைய நிர்வாகிகள் தூண்டுதலின் பேரில் இந்த எதிர்மனுதாரர்





தீட்சிதர்களின் சாதித் திமிரைக் கண்டித்து சிதம்பரம் நகரில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பா.ம.க.வின் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.வேல்முருகன் (மேல்படம்) மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் திரளில் ஒரு பகுதி.


படிப்பகம்

www.padippakam.com

செயல்பட்டு வருகிறார்'' எனப் பார்ப்பனக் கும்பலே அதிசயிக்கும்படி தீண்டாமை விஷம் தீர்ப்பில் கக்கப்பட்டுள்ளது.

தீட்சிதர்களைத் தவிர்த்து மற்றவர்களைப் பாட அனுமதித்தால், அந்தத் திருக்கோயிலின் புனிதத்தன்மை கெட்டு விடும் என்பதற்கு, தீண்டாமை - சாதிப் பாகுபாட்டைத் தவிர வேறென்ன பொருள் கொள்ள முடியும்?

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, 8.5.2000 அன்று ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையேறிப் பாட முயன்றபொழுது, தீட்சிதர்கள் கோயிலுக்குள்ளேயே, பக்தர்களின் கண் முன்னாலேயே ஆறுமுகசாமியைக் கொடூரமாகத் தாக்கி, கையை முறித்து, கோவிலுக்கு வெளியே வீசியெறிந்தனர். அதனால்தான், ஆறுமுகசாமி, தான் திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாடுவதற்கு போலீசு பாதுகாப்பு கேட்டு மனு கொடுத்திருந்தார். இதன்படி பார்த்தால், தீட்சிதர்களைத்தான் வன்முறையாளர்களாகக் குற்றம் சாட்டியிருக்க வேண்டும். ஆனால், தீர்ப்போ, மற்றவர்களை (பார்ப்பனர் அல்லாதவர்களை) வன்முறையாளர்களாக, அபாண்டமாகப் பழி சுமத்துகிது.

ஆறுமுகசாமி பாடுவதற்குத் தடை கேட்டு தீட்சிதர்கள் கொடுத்திருந்த மனுவில், கோவிலில் விலையுயர்ந்த நகைகள் இருப்பதை ஒரு காரணமாகக் காட்டியிருந்தனர். தீட்சிதர்களின் இந்த வாதத்தைதான், ''மற்றவர்களைப் பாட அனுமதித்தால் கோயிலுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நட்டமும் ஏற்படும்'' எனத்தீர்ப்பு வாந்தியெடுத்துள்ளது.

கோயிலுக்கு வரும் வருமானம் பற்றி முறையாகக் கணக்குக் காட்ட மறுக்கும் தீட்சிதர்கள்; அந்த ஆலயத்தின் நிர்வாகத்தைக் கண்காணிக்க அரசு அதிகாரி நியமிக்கப்படுவதை எதிர்க்கும் தீட்சிதர்கள் கோயில் நகைகள் பற்றி ஒப்பாரி வைப்பது மோசடித்தனமானது. மேலும், ஏற்கெனவே கோயில் நகைகள் காணாமல் போனதற்கும், தீட்சிதர்களுக்கும் தொடர்புண்டு என்பது ஊரறிந்த உண்மையாக இருக்கிறது.

''இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக, 1000 ஏக்கர் நிலமுள்ளது; உண்டியல் வைக்காமல், பக்தர்களிடமிருந்து தீட்சிதர்களே நேரடியாகப் பணம் பெறுகிறார்கள். நகைகள் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் காரணங்களால் இக்கோவிலில் அரசு நிர்வாக அதிகாரியை நியமிப்பது சரி'' என சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி வெங்கடாசலய்யா 1997-இல் தீர்ப்பளித்திருக்கிறார்.



**தீண்டாமையை உறுதி செய்யும் உரிமையியல் நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து சிதம்பரம் நகரில் நடந்த தொடர்முழக்க ஆர்ப்பாட்டம்.**

மதுரையை ஆண்ட சுந்தரபாண்டியன், விஜய நகரப் பேரரசன் கிருஷ்ண தேவராயன், பல்லவ மன்னன் சிங்க தேவன் ஆகிய மன்னர்களால் கட்டப்பட்டது சிதம்பரம் - நடராஜர் கோயில் என்பதுதான் வரலாறு. சிதம்பரம் அருகேயுள்ள பிச்சாவரத்தில் தற்பொழுது வசித்து வரும் வீரப்ப சோழனார் என்ற முன்னாள் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த முன்னோர்களிடம்தான் நடராஜர் கோவிலின் நிர்வாகம் இருந்து வந்தது. இரவில் கோவில் நடையை மூடிய பிறகு, கோவில் சாவியைப் பல்லக்கில் வைத்து பிச்சாவரம் சோழனார் ஜமீன்தார் வீட்டில் ஒப்படைக்க வேண்டும். காலையில் போய் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் . மரபாக இருந்து வந்தது. அந்த ஜமீன்தார் குடும்பத்தை ஏமாற்றி, கோவில் நிர்வாகத்தை தீட்சிதர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள் என்பது உலகமே அறிந்த உண்மை. வடநாட்டில் இருந்து ஓட்டி வரப்பட்டு சிதம்பரத்தில் குடியமர்த்தப்பட்ட தீட்சிதர்கள், இப்பொழுது சிதம்பரம் கோயில் தொன்று தொட்டே தங்களுக்குச் சொந்தமாக இருந்து வருவதாக வரலாற்றையே திரித்து விட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்த கதையாக, தீட்சிதர்களை யோக்கியவான்களாகவும், மற்றவர்களைத் திருடர்கள் போலவும் தீர்ப்பு அபாண்டமாகப் பழி போடுகிறது.

ஐதீகம் - மரபைக் காட்டி, திருச்சிற்றம்பல மேடையில் தீட்சிதர்கள்தான் தேவாரம்-திருவாசகம் பாட உரிமை படைத்தவர்கள் என்கிறது தீர்ப்பு.

ஆனால், 1987-க்கு முன்பு வரை, தீட்சிதர்கள் கூட திருச்சிற்றம்பல மேடையில் தேவாரம் - திருவாசகம் பாடியது கிடையாது. திருச்சிற்றம்பல மேடைக்குக் கீழிருக்கும் மகாமண்டபத்தைத் தாண்டி தேவாரம் - திருவாசகம் வருவதற்கு தீட்சிதர்கள் அனுமதித்ததேயில்லை. இத் தீண்டாமைக்கு எதிராக தமிழ் அறிஞர்கள் நடத்திய போராட்டத்தாலும்; 1987-இல் இந்து அறநிலையத்துறை அமைச்சராக இருந்த வீ.வீ. சுவாமிநாதன் கொடுத்த நெருக்குதலாலும், தீட்சிதர்கள் தாங்களே திருச்சிற்றம்பல மேடையில் தேவாரம் - திருவாசகம் பாடுவதாகச் சமரசம் செய்து கொண்டார்கள்.

1999-இல் கடலூர் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி, சிவனடியார் ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடை ஏறி, தேவாரம் - திருவாசகம் பாடி நடராஜனை வழிபட்டுள்ளார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தவுடன், மற்றவர்களும் திருச்சிற்றம்பல மேடை ஏறிப் பாடி விடுவார்களோ என அரண்டு போன தீட்சிதர் கும்பல், தங்களுக்கு மட்டுமே அந்த உரிமையுண்டு எனப் புளுகத் தொடங்கியது. தங்கள் சுய இலாபத்திற்காக ஐதீகம் - மரபுகளை உடைப்பதும், உருவாக்குவதும் பார்ப்பனர்களுக்குக் கைவந்த கலையல்லவா!

எல்லாவற்றுக்கும் மேலாக, ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை தமிழகக் கோயில்களில் தேவார திருவாசகமும், நாலாயிர திவ்ய பிரபந்தங்களும் ஓதப்பட்டதற்கான கல்வெட்டுச் சான்றுகள் ஏராளமாக உள்ளன. பார்ப்பனர்களைப் போலவே, தீர்ப்பும் இந்த வரலாற்று உண்மைகளைக் குழி


படிப்பகம்

www.padippakam.com

தோண்டி புதைத்து விட்டு, தமிழுக்கும், தமிழனுக்கும் தடை போடுகிறது. சிதம் பரம் கோயிலில் விற்கப்படும் ''ஸ்தல புராணம்'' என்ற புத்தகத்தில் (இதுதான் தீட்சிதர்கள் கொடுத்த வரலாற்று ஆதார மும்கூட) கூறப்படும் ''வரலாற்று''ப் பிதற்றல்களை ஆதாரமாகக் காட்டும் இந்தத் தீர்ப்பை, அறிவும், மானமும் உள்ள எவரேனும் ஏற்றுக் கொள்ள முடியுமா?

ஆறுமுகசாமியை மனித உரிமை பாதுகாப்பு மையம் தூண்டி விடுவதாகப் புலனாய்வு செய்திருக்கிறது தீர்ப்பு. 1999-இல், திருச்சிற்றம்பல மேடை ஏறிப் பாட முயன்ற ஆறுமுகசாமியை தீட்சிதர்கள் தடுத்தபொழுது, ஆறுமுக சாமி கடலூர் மாவட்ட நீதிபதியிடம் தனது வழிபாட்டு உரிமைக்காக மனு கொடுத்தார். அப்பொழுது அந்த உரிமைக்காக அவரைத் தூண்டிவிட்டது யார் என்றும் புலனாய்வு செய்திருந்தால், தீர்ப்பு இன்னும் தெளிவாக இருந்திருக்கும்.

''நந்தன் முக்தியடைந்த இடம் தான் சிதம்பரம் நடராஜர் கோவில்'' என்ற பார்ப்பனப் புளுகை, வரலாற்று மோசடியை மேற்கோள் காட்டும் தீர்ப்பில், உண்மையையும், நியாயத்தையும் முட்டாள்கூடத் தேட மாட்டான்.

நியாயமாகப் பார்த்தால் தமிழர்களைத் தீண்டத்தகாதவர்களாகவும், திருடர்களாகவும், வன்முறையாளர்களாகவும் சித்தரித்துத் தீர்ப்பை எழுதிய நீதிபதி அம்பேத்கரைப் பதவி நீக்கம் செய்து, அவரை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், சூத்திரர்களின் ஆட்சி எனச் சொல்லிக் கொள்ளப்படும் கருணாநிதி அரசின் கீழ் இருக்கும் போலீசோ, நீதிபதி அம்பேத்கரைக் கண்டித்து சுவரொட்டி இயக்கம் எடுத்த வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய பரட்சிகர அமைப்புகள் மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறது.

இத்தீர்ப்பை பல்வேறு சனநாயக அமைப்புகளும், தமிழின அமைப்புகளும் கண்டித்துள்ளன. மேலும், இத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப் போவதாக ஆறுமுகசாமி தரப்பு வழக்குரைஞர்கள் கூறியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, வீட்டுத் தரகர் ராயர், மூர்த்தி தீட்சிதர், செல்வராஜ் ஆகியோர் சிதம்பரம் கோயிலில் மர்மமான முறையில் கொல்லப்பட்டு இறந்து கிடந்ததைப் பற்றி விசாரிக்க வேண்டும் என முன்னாள் ஆடூர் ஊராட்சி மன்றத் தலைவர் என்.இளங்கோவன் கொடுத்த புகாரை விசாரிக்காமல் போலீசார் கிடப்பில் போட்டு வைத்துள்ளனர். இப்புகார் தொடர்பாக, முன்னாள் இந்து அறநிலையத்துறை அமைச்சர் வீ.வீ. சாமிநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாம்பசிவம் ஆகியோர் அனுப்பியுள்ள நினைவூட்டல் கடிதங்களையும் அதிகார வர்க்கம் கண்டு கொள்ளவேயில்லை.

இந்நிலையில் இப்புகார் மீது உடனடியாக போலீசார் விசாரணை நடத்த வேண்டும் என மனித உரிமை பாதுகாப்பு மையம் தொடுத்த வழக்கை ஏற்றுக் கொண்டுள்ள உயர்நீதி மன்றம், இது தொடர்பாக பதில் அளிக்கக் கோரி தமிழக அரசுக்கு ''நோட்டீஸ்'' அனுப்பியிருக்கிறது.

சிதம்பரம் கோயிலுக்குள் நுழைய விடாமல் ஆறுமுகசாமி கைது செய்யப்பட்ட விவகாரம் சட்டசபையில் எழுப்பப்பட்ட பொழுது, ''இந்தச் சட்டப் பிரச்சினை குறித்து மூத்த வழக்கறிஞர்களுடன் ஆராய்ந்து பார்த்து, இதை எப்படி எதிர் கொள்ளலாம் என அரசு முடிவு செய்யும்'' என்று தமிழக முதல்வர் கருணாநிதி உறுதியளித்தார். இதனை நினைவூட்டியும்; ''மற்றவர்கள்'' திருச்சிற்றம்பல மேடையில் ஏறி தேவாரம் - திருவாசகம் பாடத் தடை செய்து தீர்ப்பு வந்துள்ள நிலையில், தமிழக அரசு இனியும் மெத்தனமாக இல்லாமல், இப்பிரச்சினையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் கையெழுத்து இயக்கமொன்றை, சிதம்பரம் நகர் பகுதியில் மனித உரிமை பாதுகாப்பு மையம், தி.க., பா.ம.க., சி.பி.ஐ., சி.பி.எம்., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தி வருகின்றன.

பத்து நாட்களில் ஒரு இலட்சம் கையெழுத்துப் பெற்று, அந்த மனுவை தமிழக முதல்வரிடம் கொடுப்பது என்ற இலக்கோடு, இந்தக் கையெழுத்து இயக்கம் வீச்சாக நடைபெற்று வருகிறது. சிதம்பரம் நகரப் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள இதற்கான சாவடியில் ஆறுமுகசாமி தங்கியிருந்து இப்பிரச்சினை தொர்டர்பாக பொதுமக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் அளித்து வருகிறார். கையெழுத்து இயக்கம் தொடங்கிய முதல் மூன்று நாட்களுக்குள்ளாகவே, ஏறத்தாழ 10,000 பேர் தாமாகவே சாவடிக்கு வந்து, இப்போராட்டத்திற்கு ஆதரவாகக் கையெழுத்திட்டுள்ளதோடு, ''ஒருவருக்கு ஒரு ரூபாய்'' என்ற போராட்ட நிதியினையும் வழங்கி வருகின்றனர். பல இளைஞர்களும், மாணவர்களும் அடுத்த கட்ட போராட்டத்திற்குத் தங்களையும் அழைக்கக் கோரி, பெயரையும், முகவரியையும் கொடுத்துச் சென்றுள்ளனர்.

பார்ப்பனர்களும், நீதிமன்றமும் தமிழ் வழிபாட்டு உரிமைக்கு குறுக்கே நந்தியாக நின்றாலும், உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பக்தர்கள் இக்கோரிக்கைக்கு ஆதரவாக நிற்பதற்கு இதுவே சாட்சி. இவர்களை அமைப்பாக அணிதிரட்டிப் போராட்டத்தில் இறங்கச் செய்வதன் மூலம்தான், கோவில்களில் தமிழுக்கும், தமிழனுக்கும் எதிராகப் பார்ப்பனர்கள் கடைபிடிக்கும் தீண்டாமையை ஒழித்துக்கட்ட முடியும்.

– மனித உரிமை பாதுகாப்பு மையம், கடலூர் மாவட்டம்.

## திருட்டு தீட்சிதரே

பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற கதையாக, சிதம்பரம் நகரில் மிதிவண்டிகளைத் திருடுவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கும் ராமராஜ் தீட்சிதர் என்ற திருட்டுப் பார்ப்பானை, அவன் 10.8.2006 அன்று ஒரு மிதிவண்டியைத் திருடிச் செல்லும் பொழுது பொதுமக்கள் கையும் களவுமாகப் பிடித்து போலீசில் ஒப்படைத்தனர். தீட்சிதர் கும்பலோ, ராமராஜ் தீட்சிதர் மனநிலை சரியில்லாதவர் என்ற பொய்யைக் கூறி அவனை விடுவிக்க முயன்றது.

எனினும், பத்திரிகையாளர்கள் இத் திருட்டைப் புகைப்படம் எடுத்துவிட்டதன் விளைவாகவும்; மனித உரிமை பாதுகாப்பு மைய வழக்கறிஞர்கள் இது பற்றி உயர் அதிகாரிகளுக்கு தந்தி கொடுத்ததோடு, அத்திருட்டுப் பார்ப்பானைக் கைது செய்யாவிட்டால் போராட்டம் நடத்துவோம் என எச்சரித்ததன் விளைவாகவும், சிதம்பரம் நகர போலீசார் வேறு வழியின்றி, ராமராஜ் தீட்சிதரைக் கைது செய்ததோடு, அவன் ஏற்கெனவே திருடி மறைத்து வைத்திருந்த ஐந்து மிதிவண்டிகளையும் கைப்பற்றினர்.

ஊரான் வீட்டு மிதிவண்டிகளையே அமுக்கப் பார்க்கும் தீட்சிதர் கும்பல், நடராசர் கோவில் சொத்தைப் புறங்கையால் நக்காமல் விட்டு வைத்திருப்பார்களா? சிவன் சொத்து குலநாசம் என்பதெல்லாம் ''மற்றவர்களுக்கு''த்தான் போலும்!


படிப்பகம்

www.padippakam.com

# கந்துவட்டிக் கொள்ளையர்களின் பிடியில் கரூர் நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள்




கரூர் நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களை மலத்தில் மொய்க்கும் ஈக்களைப் போல் கந்துவட்டிக் கொள்ளைக் கும்பல் மொய்த்து உறிஞ்சும் கொடுமை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஏறக்குறைய எல்லாத் துப்புரவு தொழிலாளர்களுமே இந்தக் கும்பலிடம் சிக்கியுள்ளனர். அத்தகைய கும்பல்களில் ஒன்றுதான் கரூர் கோட்டையண்ணன் தோப்பைச் சேர்ந்த கோவிந்தம்மாள் - முனியப்பன் கும்பலாகும். துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இந்தக் கும்பல் கந்து வட்டிக்கு பணம் கொடுத்து வசூலிக்கும் முறைகளே கொடூரமானது. சம்பள-வங்கி பாஸ் புத்தகங்களைப் பிடுங்கித் தன்வசம் வைத்துக் கொள்வதோடு, வெற்றுப் பாண்டுகளில் மிரட்டிக் கையொப்பம் வாங்கிக் கொண்டுதான் துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தாராளமாகக் கடன் கொடுக்கிறது.

சம்பள நாளன்று வங்கி வாசலிலேயே காத்திருந்து பிட்பாக்கெட் திருடனைப் போல மொத்தச் சம்பளத் தொகையையும் இந்தக் கும்பல் அபகரித்துச் சென்று விடும். கந்துவட்டி முனியப்பன் வந்தால்தான் துப்புரவு தொழிலாளர்கள் சம்பளமே வங்கியிலிருந்து பெறமுடியும். ஏனென்றால்; ஏற்கெனவே வங்கி பாஸ் புத்தகத்தை அந்த கந்துவட்டிக் கும்பல் தன் வசம் வைத்துள்ளது. மாதம் முழுக்க பீ, மூத்திரங்களில் குளித்து நனைந்து நகரத்தைச் சுத்தப்படுத்தும் துப்புரவுத் தொழிலாளர்கள், அற்பமான சம்பளத் தொகையைக் கூடத் தானும் தனது குடும்பத்தாரும் அனுபவிக்க முடியாத அவலத்தை என்னவென்று சொல்வது?

கிருஷ்ணம்மாள் என்ற துப்புரவுத் தொழிலாளி ஆறு வருடங்களுக்கு முன்பு ரூ. 10,000 கடனாகப் பெற்றதற்கு அவரிடமிருந்து இதுவரை ரூ. 86,000-ஐ வட்டியாக மட்டுமே அபரித்துச் சென்றுள்ளது முனியப்பன் கும்பல். பல துப்புரவுத் தொழிலாளர்களின் ஒய்வூதியத்தையும் விட்டு வைப்பதில்லை இந்தக் கும்பல். கந்துவட்டி கொடுக்கச் சற்று காலதாமதமோ கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டாலோ ஏற்கெனவே கையெழுத்து வாங்கி வைத்துள்ள வெற்றுப் பாண்டுகளில் தன் விருப்பப்படி தொகையை எழுதி, அதைக் கூலிக்கு மாரடிக்கும் சில வக்கீல்களை வைத்துப் பொய் வழக்குப் போட்டு, அதில் தனக்குச் சாதகமான தீர்ப்பையும் பெற்றுச் சம்பல் பள்ளததாக்கு கொள்ளையர்களையே விஞ்சும் விதத்தில் கொள்ளையடிக்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் தற்கொலை முயற்சிக்குத் தள்ளப்பட்டும், வாழ வழியிழந்தும் நடுத்தெருவில் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

மேலும் முனியப்பன் கும்பல் கீழ்த்தரமான காட்டுமிராண்டி கும்பல் என்பதற்கு, தன்னிடம் கந்துவட்டிக்கு பணம் வாங்கிய கன்னியம்மாளின் தலைமுடியை இழுத்து, அவர் கட்டியிருந்த சேலை முழுவதையும் உருவிப் பலர் முன்னிலையில் அவமானப்படுத்தியிருப்பதே சான்ற கூறப் போதுமானது.

இவ்வாறு ஒருபுறம் கந்துவட்டிக்காரர்களின் கொடுமைகளை அனுபவிக்கும் அதேவேளையில், மறுபுறம் துப்புரவு பணியாளர்களை மிரட்டி வேலை வாங்கும் மேஸ்திரிகளின் கொடுமையும் தொடர்கிறது. பணி நேரம் முடிந்தும் விடுவிக்காமல் தொடர்ந்து கூடுதல் நேரமாக வேலை வாங்கிச் சுரண்டுவதும், மறுத்தால் வேலையே இல்லாமல் செய்து விடுவதாக மிரட்டுவதும், எஸ்.ஆர். பதிவேட்டில் பதிவு செய்யமாட்டேன் என்று பயமுறுத்துவதும் தினசரிக் கொடுமையாக நடந்து வருகிறது.

இத்தகைய கொடுமைகளையெல்லாம் தெரிந்திருந்தும் மௌனம் சாதித்து வருகின்றன இங்குள்ள ஓட்டுக் கட்சி தொழிற்சங்கங்கள். இந்தக் கொடுமைகளுக்கு முடிவு கட்டும் விதமாக பு.மா.இ.மு. அமைப்பினர் நகரம் முழுக்க சுவரொட்டி ஒட்டி, போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தங்களுக்கு ஏற்பட்டு வரும் கொடுமைகளுக்கு யாரேனும் குரல் கொடுக்க மாட்டார்களா என்று ஏங்கித் தவித்த துப்புரவுத் தொழிலாளர் மத்தியில் இச்சுவரொட்டி பிரச்சாரம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

**– பு.ஜ. செய்தியாளர், கரூர்.**

**தலையங்கம் தொடர்ச்சி**

எழிலனுடன் மாவிலாறு அணைக்கு போன கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த (பிரெஞ்சு நாட்டு அரசு சாரா நிறுவனத் தொண்டர்கள்) 15 பேர் மீது வேண்டுமென்றே குண்டு வீசித் தாக்கிக் கொன்றது சிங்கள இனவெறி அரசு. பிறகு ஈழத் தமிழ் மாணவிகள் தஞ்சம் புகுந்திருந்த செஞ்சோலை பள்ளியின் மீது விமானக் குண்டுவீசி 61 பேரைக் கொன்று குவித்தது. இது போன்ற மிருகத்தனமான தாக்குதல்கள் உலகெங்கும் கடும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. இவையெல்லாம் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியென்று புளுகி சிங்கள அரசு எக்காளமிடுகிறது. ஆனால், விடுதலைப் புலிகள் முதன்முறையாக விமானத் தாக்குதல் மூலம் பதிலடி கொடுப்பது சிங்கள இனவெறி அரசை கிலிபிடிக்கச் செய்திருக்கிறது. ஈழ மக்கள் மீது இராணுவ ரீதியான தீர்வு எதையும் திணிக்க முடியாது என்பதையே இன்றைய போர்நிலைமைகள் காட்டுகின்றன.

அதேசமயம், சிங்கள இனவெறியில் மூழ்கிப் போயுள்ள இலங்கை ஆளும் கும்பல்கள் ஒன்று மாறி மற்றொன்று இனவெறிக்குத் தூபம் போட்டு ஆதாயம் அடைய எத்தணிக்கின்றனவே தவிர, அரசியல் தீர்வுக்கு எவையும் இடந்தரவில்லை. எத்தரப்புக்கும் இறுதி வெற்றி இல்லாத இழுபறி நிலையே மேலும் பல ஆண்டுகள் நீடிக்கும் என்பதையே களநிலைமைகள் உறுதி செய்கின்றன ●


படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டிலிருந்து நடத்திவரும் தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பிறகு உருவாகியுள்ள கோக் எதிர்ப்புப் போராட்டக்குழு, 17.8.06 அன்று மாலை நெல்லை சந்திப்பு - பேரங்காடி முன்பாக கோக்-பெப்சியைத் தடை செய்யக் கோரி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கோக் எதிர்ப்புப் போராட்டக் குழு தலைவரான வழக்குரைஞர் இரா.சி. தங்கசாமி அவர்கள் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மூத்த வழக்குரைஞர் மங்களா எஸ்.ஜவகர்லால், நெல்லை மாவட்ட வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் முருகேசன், பா.ம.க. மாநகரத் தலைவர் மோகன்ராஜ், மானூர் ஒன்றிய கவுன்சிலர் மணி, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் இராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, தாமிரவருணியை உறிஞ்சிப் பேரழிவை விளைவிக்க வந்துள்ள கோக் ஆலையை வெளியேற்ற வேண்டிய அவசியத்தை விளக்கிக் கண்டன உரையாற்றினர். கோக் எதிர்ப்புணர்வு நெல்லை மக்களின் நெஞ்சில் ஆழமாக வேரூன்றியுள்ள நிலையில், அவர்களது போராட்ட உணர்வுக்கு புது ரத்தம் பாய்ச்சுவதாக இந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது. கோக் கம்பெனியின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து நெல்லை-கங்கை கொண்டான் வட்டார மக்களிடம் 22-ஆம் தேதி முதல் ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை கோக் எதிர்ப்புப் போராட்டக் குழுவினர் நடத்தி வருகின்றனர்.

- கோக் ஆலை அமைந்துள்ள நெல்லை-கங்கை கொண்டானில் ஆகஸ்ட் 15 அன்று நடந்த கிராமசபைக் கூட்டத்தில், கோக் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை ரத்து செய்து அதை வெளியேற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கோகோ கோலா ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகள் பகுதிவாழ் மக்களுக்கு பெரும் பாதிப்பை விளைவிக்கின்றன; கம்பெனியில் மூட்டை மூட்டையாக வைத்துள்ள மூலப் பொருட்கள் மழைக்காலங்களில் கரைந்து வெளியேறி சுற்றுப்புறக் குளங்களை நஞ்சாக்கியுள்ளன; ஆலையிலிருந்து இரவு 11 மணிக்கு மேல் வெளியேற்றப்படும் நச்சுப் புகையால் மூச்சுத் திணறலும் வாந்தியும் ஏற்படுகிறது என்று ஆவேசமாகக் குற்றம் சாட்டிய உறுப்பினர்களும் பொது மக்களும் கோக் ஆலையை உடனடியாக வெளியேற்றக் கோரினர். கோக்கிற்கு ஆதரவாகப் பேச முற்பட்ட கைக்கூலி மனோகரன் என்பவனை கூட்டத்தினர் ஆத்திரத்தோடு தாக்க முற்பட்டதும் போலீசு தலையிட்டு அவனை மீட்டுச் சென்றது.

கோக்கினால் மனித உயிருக்கு ஏற்படும் பேரழிவுகளைச் சித்தரித்து விளக்கும் சுவரொட்டி பிரச்சாரம், கழுதைக்கு கோக் குடிக்கக் கொடுக்கும் போராட்டம், கோக்கை ஊற்றி கக்கூசு கழுவும் போராட்டம், கோக்கிற்கு வக்காலத்து வாங்கிய இந்தி நடிகன் ஷாருக்கானுக்கு எதிரான போராட்டம் எனப் பல வடிவங்களில் நாடெங்கும் ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்கின்றன. கோக்கிற்கு எதிரான இப்போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அமெரிக்க நஞ்சை நம்மீது திணிக்கும் அரசியல் அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டமாக, மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்துச் செல்வதே இன்றைய அவசர - அவசியத் தேவையாக உள்ளது.

ஓங்கட்டும் கோக் எதிர்ப்புப் போராட்டம்! ஒழியட்டும் மறுகாலனியாதிக்கம்!

– பு.ஜ. செய்தியாளர்கள்.

# எச்சில் காசில் ஏகாதிபத்திய எதிர்ப்பு!

ஏகாதிபத்தியத்தை வீழ்த்த பாட்டாளி வர்க்க சோசலிசமே ஒரே தீர்வு - என்ற சிந்தனைக்கு மக்கள் சென்றுவிடக்கூடாது என்று தடுப்பதற்காகவும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சீர்குலைப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ள கைக்கூலி அமைப்புதான் உலக சமூக மன்றம் (WSF). ஃபோர்டு பவுண்டேசன், ராக்பெல்லர் புவுண்டேசன் போன்ற ஏகாதிபத்திய முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள், ஐரோப்பிய அரசுகள் ஆகியன அளிக்கும் எச்சில் காசில் வயிறு வளர்க்கும் தன்னார்வக் குழுக்களின் தலைமைப் பீடம்தான் உ.ச.ம. இதன் தமிழகக் கிளையான தமிழ்நாடு சமூக மன்றத்தின் 3-வது மாநில மாநாடு கடந்த ஆகஸ்ட் 12,13 தேதிகளில் மதுரை லேடி டோக் கல்லூரியில் நடந்தது.

''இன்னொரு உலகம் சாத்தியமே!'' என்ற முழக்கத்துடன் இந்த மாநாட்டை நடத்த, ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களைவிட சி.பி.எம். கட்சியின் மக்கள்திரள் அமைப்புகள்தாம் அதிக முயற்சியும் அக்கறையும் காட்டின. இந்த அமைப்புகளின் அரங்குகளில்தான் கலந்தாலோசனைக் கூட்டங்களும் ஏற்பாடுகளும் நடந்தன.

இந்த மாநாட்டையும் அதன் கைக்கூலித்தனத்தையும், சி.பி.எம். கட்சியின் பித்தலாட்டத்தையும் அம்பலப்படுத்தி, மதுரை மாவட்ட ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் முழக்க சுவரொட்டிகள், கேலிச் சித்திர சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்தி துண்டறிக்கை வெளியிட்டு அவற்றை மாநாட்டிலும் விநியோகித்தன. இதைக் கண்டு பீதியடைந்த 'சிவப்பு செக்யூரிட்டி'களான இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் பாலா, சி.பி.எம். செயற்குழு உறுப்பினர் ராஜமாணிக்கம் ஆகியோர் பிரசுரம் விநியோகிக்க கூடாது என்று அருள் வந்து இறங்கியவர்கள் போல ஆவேசமாக சாமியாடினர். அவர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்துவிட்டு மாநாட்டிலும், சுற்றியுள்ள கடைவீதி - குடியிருப்புகளிலும் தோழர்கள் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்தனர்.

இம்மாநாட்டுக்கு கூட்டம் திரட்டுவதற்காக மதுரை - உசிலம்பட்டி வட்டாரங்களிலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் லாரிகளில் ஏற்றி வரப்பட்டனர். தன்னார்வக் குழுக்களின் நிறுவனர்களோ, ''ஸ்கார்பியோ'' ஏசி காரில் டாம்பீகமாக வந்திறங்கினர். மான்சாண்டோவின் பி.டி. கத்திரியின் பயங்கரத்தைப் பற்றி விளக்கிய நம்மாழ்வாரின் உரையையோ, கோக்-பெப்சியை விரட்ட வேண்டிய அவசியத்தைப் பற்றி விளக்கிய வெள்ளையனின் உரையையோ கேட்டவர்களைவிட, சுயஉதவிக் குழுக்களின் கோல்டு கவரிங், முகப்பூச்சு கிரீம், புடவைக் கடைகளில்தான் கூட்டம் அதிகமாக இருந்தது.

மாநாடு நடந்த விதமே அதன் யோக்கியதையைக் காட்டிவிட்ட நிலையில், ஏகாதிபத்திய கைக்கூலிகளின் உலக சமூக மன்றத்தையும் அதனுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள சி.பி.எம். கட்சியையும் அம்பலப்படுத்தி புரட்சிகர அமைப்புகள் நடத்திய இப்பிரச்சாரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளிடமும் புரட்சியை நேசிக்கும் மக்களிடமும் விழிப்புணர்வையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்கள், மதுரை.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

## 1800 - 1801
## தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் இந்திய சுதந்திரப் போரின் மரபை உயர்த்திப் பிடிப்போம்!

1806 – வேலூர் சிப்பாய் புரட்சி 200-ஆம் ஆண்டு

1857 – வட இந்திய சுதந்திரப் போர் 150-ஆம் ஆண்டு

1906 – ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிங்கம் தோழர் பகத்சிங் பிறந்தநாள் 100-ஆம் ஆண்டு

# ஆகஸ்டு - 15
## போலி சுதந்திரத்தைத் திரைகிழிப்போம்! மறுகாலனியாக்கத்தை முறியடிப்போம்!
## - என 14.8.06 அன்று தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் நடத்திய
# தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்!










## பொங்கி எழட்டும் சுதந்திர வேட்கை!
## பொசுங்கி அழியட்டும் மறுகாலனியாதிக்கம்!

படிப்பகம்